# நிந்தவூர் தேர்தல் ஆட்சேபமனு தள்ளுபடி; முஸ்தாபா தமது ஸ்தானத்தை காப்பாற்றினார்

Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 20

ஈழநாடு

வாரமலர்

மலர் 9 | பிலவங்க வைகாசி 24 | ஸபர் 27 | (7—6—67) | புதன்கிழமை | இதழ் 116

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை
உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்
47, பிச்ரோட், யாழ்ப்பாணம்.

மில்க் வைற்
நீல சோப், பார் சோப்
பட்டு, பருத்தி, நைலோன்
துணி வகைகளையும்
ஆச்சரியப்படத்தக்க முறையில்
சுத்தம் செய்கிறது

கொழும்பு, செவ். நிந்தவூர் தேர்தல் ஆட்சேபமனு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

நிந்தவூர் தொகுதியிலிருந்து ஜனப் எம். எம். முஸ்தாபா பார்லிமெண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாதெனத் தீர்ப்பளிக்கவேண்டுமெனக் கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் அவருக்கெதிராக மூன்று குற்றச்சாட்டுக்கள் சம்பந்தப்பட்டிருந்தன.

ஆட்சேப மனுமீது விசாரணை நடத்திய தேர்தல் நீதிபதி, குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை எனத் தெரிவித்து மனுவைச் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்தார்.

ஜனப். எம். எம். முஸ்தாபா உதவி சமூக சேவா மந்திரியாவார்.

## சூயஸ் கால்வாய் மூடப்பட்டது

## இஸ்ரேல் தலைநகர் மீது எகிப்து படைகள் குண்டுமாரி

### காஸா நகரைக் கைப்பற்றியதாக இஸ்ரேல் அறிவிப்பு

கெய்ரோ, ஜூன் 6

மேற்கு ஆசியாவில் ஐக்கிய அரபுக் குடியரசுக்கும், இஸ்ரேலுக்குமிடையில் மூண்டுள்ள யுத்தத்தின் இரண்டாம் நாளான இன்று கடைசிச் சம்பவமாக சூயஸ் கால்வாய் சகல கப்பல் போக்குவரத்துகளுக்கும் மூடப்பட்டுள்ளது. இதனை இன்று கெய்ரோவானொலி அறிவித்தது.

ஜோர்டானில் அரபுப்படைகளுக்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டன் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்தே முதல் நடவடிக்கையாக சூயஸ் கால்வாய் மூடப்பட்டிருப்பதாக ஐக்கிய அரபுக்குடியரசு அறிவித்தது.

மேற்கு ஆசியாவில் மூண்டுள்ள யுத்தம் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தி மோசமான நிலைக்கு சென்றுகொண்டிருக்கிற தென்பதற்கு அறிகுறியாக இன்னொரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்குநாடுகளுக்கான எண்ணெய் 'சப்ளை'யை ... சவூதி அராபியாவும்,



பாலன் யேசுவை அர்ச். அந்தோனியார் அரவணைக்கும் பாக்கியம் பெற்றதனுல், உலக வாழ்க்கையில் கோடிக்கணக்கான அற்புதங்களைச் செய்தார். அர்ச். அந்தோனியாரின் உற்சவ தினம் இம்மாதம் உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது.

## பந்தோபஸ்துசபை மீண்டும் முயற்சி

ஐ. நா. பந்தோபஸ்து சபை மீண்டும் இன்று இரவு ஒன்பது மணிக்குக் கூடி மேற்கு ஆசியாவில் எழுந்துள்ள நெருக்கடி நிலைமைபற்றி ஆராய்ந்தது. ... பந்தோபஸ்து

பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் மேற்கு ஆசியா போர் சம்பந்தமாக அறிக்கை ஒன்றை விடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. பிரதமர் வில்சன் அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன், சோவியத்

## பிரதமர் டட்லியின் கெய்ரோபயணம் முடிவில்லை

கொழும்பு, செவ் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா முன்னர் திட்டமிட்டபடி ஐக்கிய அரபுக் குடியரசுக்குச் செல்வாரா என்பது இன்னும் நிச்சயமாகத் தெரியவில்லை.

ஐக்கிய அரபுக் குடியரசிலுள்ள நிலைமை பற்றி தெரிவிக்குமாறு கெய்ரோவிலுள்ள இலங்கைத்தூதர் கேட்கப்பட்டுள்ளார்.

இதே சமயம் சென்ற வாரம் கெய்ரோவில் தங்கியிருந்த எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகா கெய்ரோவிலிருந்து பெல்கிரேட் புறப்பட்டுச் சென்றுவிட்டதாகச் செய்தி கிடைத்துள்ளது.

### குழந்தையுடன் 200வீடுகள் தீக்கிரை

விஜயவாடா, ஜூன் 6

விஜயவாடாவில் 200 வீடுகள் தீக்கிரையாகி விட்டன. ஆறு வயதுச்சிறுவன் ஒருவனும் தீயில் வெந்து மாண்டான்.

## வல்வை இளைஞன் மரணம்; வழக்கு தாக்கலாகாது

கொழும்பு, செவ். வல்வெட்டித்துறையில் சென்ற ஏப்ரல் மாதம் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் மாண்ட ஆர். சிவஞானசுந்தரம் என்ற இளைஞனின் மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய பருத்தித்துறை நீதிபதி திரு. கே. விக்னராஜா 'கொலை' என அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து அச்சம்பவம் பற்றியும் மரண விசாரணைப் பதிவுப் பிரதிகளையும் ஆராய்ந்த அட்டர்ணி ஜெனரல், இளைஞனின் மரணம் சம்பந்தமாக மேற்கொண்டும் எதுவித நடவடிக்கையும் எடுப்பதில் பயனில்லையென்று அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

எனவே இளைஞனின் மரணம் சம்பந்தமாக எவர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்படமாட்டாதென தெரியவருகிறது.

### வேலைக்குத் திரும்பினர்

யாழ்ப்பாணம், புதன்

நேற்றுக் காலை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட யாழ். மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மாநகரசபை விசேட ஆணையாளரின் நடவடிக்கையைத் தொடர்ந்து மீண்டும் ஒரு மணி நேரத்தில் வேலைக்குத் திரும்பினர்கள்.

## அ... மொரார்ஜி கைவிரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ஐக்கிய அரபுக்குடியரசு அறிவித்தது.

மேற்கு ஆசியாவில் மூண்டுள்ள யுத்தம் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தி மோசமான நிலைக்கு சென்றுகொண்டிருக்கிற தென்பதற்கு அறிகுறியாக இன்னெரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்குநாடுகளுக்கான எண்ணெய் 'சப்ளை'யை ஈராக்துண்டித்துக் கொண்டு விட்டதாக அறிவித்துள்ளது. இதேபோல் சவூதி அராபியாவும், குவாய்த்தும் எண்ணை 'சப்ளை'யைத் துண்டித்துக் கொள்ளப்போவதாக அறிவித்துள்ளன. அமெரிக்காவும், பிரிட்டனும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு இஸ்ரேலுக்கு ஆதரவாக நின்று அரபுநாடுகளைத் தாக்கியதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக ஈராக் தெரிவித்துள்ளது. ஆனல் அமெரிக்காவும, பிரிட்டனும் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளன.

## நாஸர் வேண்டுகோள்

அரபு நாட்டுத் தலைவர்கள் எல்லாருக்கும் ஐ அ குடியரசு அதிபர் நாஸர் அனுப்பியுள்ள செய்தியொன்றில், "ஒருமுகமாக நின்று எதிர்ப்புச்சக்திகளையெல்லாம் முறியடிக்கப்போரில் குதியுங்கள்" என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அரபுநாடுகளிலுள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் தூதரகங்களை அழித்து நாசமாக்கும்படி ஐக்கிய அரபுக் குடியரசு வானெலி அறிவித்தது.

ஐக்கிய அரபுக் குடியரசிலுள்ள ஒரு அமெரிக்க தூதரகம் முற்றுக அழிக்கப்பட்டு விட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

## வெற்றி யாருக்கு?

ஐக்கிய அரபுக்குடியரசும், இஸ்ரேலும் 'எமக்கே வெற்றி; எமக்கே வெற்றி' என்று உரிமை பாராட்டிக் கொண்டன. காஸா நகரை தாம் கைப்பற்றி விட்டதாக இஸ்ரேல் அறிவித்தது.

ஜோர்டானில் அரபுப்படைகக்ளுகெதிராக பிரிட்டன், அமெரிக்கா தாக்குதல் நடவடிக்கைகளில் இறங்கியதாகவும் இஸ்ரேலியப் படைகளுக்கு பிரிட்டனும் அமெரிக்காவும் வானப் பாதுகாப்பு அளித்ததாகவும் ஐக்கிய அரபுக்குடியரசு குற்றஞ்சாட்டியது. இஸ்ரேலிய தலைநகரான டெல்அவிவ் மீது ஐக்கிய அரபுக் குடியரசு யுத்தக்கப்பல் குண்டுமாரி பொழிந்து தாக்கியதாகவும் ஐக்கிய அரபுக் குடியரசு தெரிவித்தது. ஜோர்டான் மன்னர் ஹுசெயினின் அரண்மனை மீதுஇஸ்ரேலிய விமானங்கள் குண்டுவீசித் தாக்கியதாக ஒரு செய்தி கூறுகிறது. சினய் எல்லையில் 36 இஸ்ரேலிய டாங்கிகள் சேதப்படுத்தப்பட்டதாக ஒரு செய்தி தெரிவிக்கிறது.

இஸ்ரேலுக்கும் அரபுநாடுகளுக்குமிடையில் இன்று இரண்டாவதுநாளாகவும் கடும் சண்டை தொடர்ந்து நடைபெற்றது. நேற்றுக்காலை இஸ்ரேல்-ஐக்கிய அரபுக்குடியரசு எல்லையில் காஸா எல்லையில் சினய் பகுதியில் இஸ்ரேலிய துருப்புக்களுக்கும் ஐக்கிய அரபுக்குடியரசுத் துருப்புக்களுக்குமிடையில் தரையில் நடைபெற்ற கடும் யுத்தத்துடன் இருதரப்பு விமானப் படைகளும் பலத்தசண்டையில் ஈடுபட்டன. இதே சமயம் இஸ்ரேலின் வடக்குப் பகுதியில் இஸ்ரேலியப்படைகளுக்கும் ஜோர்தான் சிரியாப்படைகளுக்குமிடையில் கடும்சண்டை நடைபெற்றது. பீரங்கிகள், மோர்ட்டார்கள் இந்த யுத்தத்தில் உபயோகிக்கப்பட்டன. விமானத் தாக்குதல்களும் நடைபெற்றன.


உ

## திருமண அழைப்பு

**க ண நா தா — பா லா ம் பி கை**

அன்புடையீர்!

நிகழும் பிலவங்க வருடம் 26-ம் திகதி [10-6-67] வெள்ளிக்கிழமை இரவு 5 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| காரைநகர் Dr. & Mrs. நடராசா அவர்களின் புத்திரன் திருநிறைசெல்வன் **கணநாதா அவர்களுக்கும்** [இ. போ. ச. கண்டி வடக்குப்பகுதி] | எமது புத்திரி திருநிறை செல்வி **பாலாம்பிகை அவர்களுக்கும்** |

திருமணம் செய்ய நிச்சயித்திருப்பதால், அவ்வமயம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர குடும்பசகிதம் சமூகம்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்ருேம்.

**(தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்படவில்லை. தயவுசெய்து இதனை அழைப்பாகக் கொள்ளவும்.)**

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
ஆ. ச. ஆறுமுகமும் பாரியாரும்
[பங்காளர் ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ்,
கொழும்பு-கண்டி-யாழ்ப்பாணம்-டம்புள்ள]

பாலாவோடை,
காரைநகர்.

2325


## புங்குடுதீவில் வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், புதன்

புங்குடுதீவு திருவள்ளுவர் மன்றத்தினர் இன்று திருவள்ளுவர் விழா கொண்டாடுகின்றனர். புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் இன்று மாலை நிகழும் இவ்விழாவுக்குத் தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் தலைமை தாங்குவார். புங்குடுதீவுக் கிராமசபைத் தலைவர் திரு. கு. வி. தம்பித்துரை திருவள்ளுவர் படத்தைத் திரை நீக்கம் செய்வார். திரு. க. வச்சிரவேலு முதலியார் சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்து கொள்கிருர். மறைத்திரு கே. பி. ஹரன், பிரம்மஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் மற்றும் வித்துவான் சி. ஆறுமுகம், ஈழத்துச் சிவானந்தன், திருவாளர்கள் கு. வி. செல்வத்துரை, ஆ. தாமோதரம்பிள்ளை, க. திருநாவுக்கரசு, வே. பொன்னம்பலம், க. சிவநாமம் ஆகியோரும் பேசுவர்.

## பந்தோபஸ்துச்சபை மீண்டும் முயற்சி

ஐ. நா. பந்தோபஸ்து சபை மீண்டும் இன்று இரவு ஒன்பது மணிக்குக் கூடி மேற்கு ஆசியாவில் எழுந்துள்ள நெருக்கடி நிலைமைபற்றி ஆராய்ந்தது. நேற்று கூடிய பந்தோபஸ்து சபை அவசரக் கூட்டத்தில் எவ்வித சமரசமும் ஏற்படாததைத் தொடர்ந்து ஒத்தி வைக்கப்பட்டது. இன்று பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் மேற்கு ஆசியா போர் சம்பந்தமாக அறிக்கை ஒன்றை விடுவார் என எதிர் பார்க்கப்பட்டது. பிரதமர் வில்சன் அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன், சோவியத் யூனியன் பிரதமர் கொஸிஜின், பிரான்ஸ் அதிபர் டிகோல் ஆகியோருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

## இந்திரா இஸ்ரேல்மீது கண்டனம்

மேற்கு ஆசியாவில் மூண்டுள்ள யுத்தத்தை இஸ்ரேல் பயங்கரமான ஆயுதச் சண்டையாக இழுத்துச் செல்ல முயல்கிறதென இன்று லோக்சபாவில் இந்தியப் பிரதமர் இந்திரா குற்றஞ்சாட்டினுர். மணிக்கு மணி மேற்கு ஆசியாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் மோசமான நிலைக்குச் சென்றுகொண்டிருக்கிறதென்பதை ஊர்ஜிதப்படுத்துகிறதென்றும், இப்படி நிலைமை போய்க்கொண்டிருந்தால் போர் மேலும் மற்ற நாடுகளுக்கும் பரவிவிடுமென்றும், அது ஒரு உலக யுத்தமாக மாறிவிடுமென்றும் பிரதமர் இந்திரா கவலை தெரிவித்தார்.

காஸா எல்லையில் பாதுகாப்புப்படையில் இருந்த 5 பாரத வீரர்களை இஸ்ரேல் வீரர்கள் தாக்கிக் கொன்றதானது மிருகத்தனமான செயல் என்று கூறிய பிரதமர் இந்திரா பாரதத்தின் சினத்தையும் சீற்றத்தையும், தெரிவிப்பதாகக் கூறினுர்.

இறந்துபோன வீரர்களின் குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் நஷ்டஈடாகக் கொடுப்பதென முடிவு செய்திருப்பதாகவும் பிரதமர் இந்திரா கூறினுர்.

அமெரிக்காவுடன் ராஜதந்திர உறவுகளை முறித்துக் கொள்வதென ஐக்கிய அரபு குடியரசு முடிவு செய்ததாக கடைசியாகக் கிடைத்த ஒருசெய்தி கூறுகின்றது.

இஸ்ரேலின் பல பகுதிகளில் அரபு படைகள் ஊடுருவிச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இஸ்ரேல் படைகளும் இவ்வாறு தங்கள் படைகள் ஊடுருவியுள்ளதாக அறிவித்தது.

## கி.ச.தலைவர் பதவி நீக்கம்

கொழும்பு, திங்கள்

தவருனநிர்வாகம், திறமையின்மை ஆகிய காரணங்களுக்காக நல்லூர் கிராமசபைத்தலைவர் பதவியிலிருந்து திரு. கே. துரைசிங்கத்தை உள்ளுராட்சி அமைச்சர் பதவிநீக்கம் செய்திருக்கிருர்.

# அண்ணுவுக்கு மொரார்ஜி கைவிரிப்பு

புதுடில்லி, ஜூன் 6

தமிழ் நாடு முதல் அமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரையின் கோரிக்கையை நிறைவேற்ற முடியாதிருப்பதாக துணைப்பிரதமரும் நிதி அமைச்சருமான திரு. மொரார்ஜி தேசாய் திரு. அண்ணுதுரையிடம் கூறிவிட்டதாகத் தெரிகிறது.

தமிழ் நாட்டுக்கு மத்திய அரசாங்கம் கொடுத்த கடனுக்குரிய வட்டிப்பணத்தை ஒரு வருட காலத்துக்கு வசூலிக்கவேண்டாமென்றும்ஒரு வருட காலக்கெடு கொடுத்தால் அப்பணத்தைக் கொண்டு சிறுபாசனத் திட்டங்களைச் செயல் படுத்தி அதன் மூலம் தமிழ்நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கலாமென திரு. அண்ணுதுரை திரு. மொரார்ஜி தேசாயிடம் தெரிவித்தார்.

### வசந்த உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை வீரமாகாளிஅம்மன் வசந்த உற்சவம் இன்று நடைபெறும். இரவு இசை மற்றும் விசேஷ நிகழ்ச்சிகள் இடம்பெறுமென அறிவிக்கப்படுகிறது.


# அருந்துங்கள்!




பால்
சபையின்
நீண்டகாலம்
பாவிக்கக்கூடிய
பால்
குளிர்ச்சியூட்டத்
தேவையற்ற
பால்

யாழ்ப்பாணத்தில் எங்கும் இடைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம் மறக்காத கவிஞன் — X

# கங்கைக் கரையில் கவிஞர்

**1898**-இல் பாரதியார் காசிக்குச் சென்றார். காசியில் பாரதியின் அத்தை வசதியாக வாழ்ந்து வந்தார். அவரது கணவர் கிருஷ்ணசிவன், 'மிக்க பொருள் செலவில் தென்னாட்டுப் பயணிகள் வந்தால், தங்குவதற்கென்று அனுமந்த கட்டத்தில் இரு மடங்கள் கட்டியிருந்தார். ஜெகத்குரு சங்கராச்சாரியாருக்கு உள்ள மரியாதையைத் தென்னாட்டாரும், வடநாட்டாரும் அவருக்குச் செலுத்தினர். பிரயாகை கயா ஆகிய இடங்களின் மடங்களிலிருந்தும் அவருக்கு நல்ல வருமானம் வந்தது.

காசிக்குச்சென்றதும் பாரதியின் அத்தை அவரைக் கலாசாலையில் சேர்த்தார். தனது கல்வி முற்றுப் பெற்றால், ஓரளவு தானே வழி பிறக்கும் எனக் கவிஞர் உணர்ந்திருக்க வேண்டும். காசியில் ஆங்கிலத்தோடு வேறு இரு மொழிகளும் கற்கவேண்டி இருந்ததால். இந்தியையும், வட மொழியையும் பயின்று, புகுமுகத் தேர்வில் பாரதி தேறினார். உணவு, உடை எதிலும் அத்தையின் பிள்ளைகளை விட பாரதிக்கு அதிக சலுகை கிடைத்தது. ஆனாலும், வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது போல், பழைய கவியுள்ளம் தலைதூக்கத் தொடங்கிற்று. காசியில், தனது பள்ளிப்படிப்புபற்றி பாரதி கூறுவதை வ. ரா. அவர்கள் சுவைபடச் சித்திரித்ததைக் காண்போம்.

''காலை மாலை நூலை ஓது என்கிறார்கள். அதுதப்பு நான்படித்த காலத்தில், நான் நூலையே ஓதினதில்லை. பள்ளிக் கூடத்துக்குக் காலையில் போனால், மாலையில் போகமாட்டேன். மாலையில் போகலாம் என்றெண்ணிக் காலையில் போக மாட்டேன். பிறகு ஓர் எண்ணம் தோன்றும், மாலையிலும் போக மாட்டேன். காலை, மாலை உருண்டு ஓடிப்போகும். 'புஸ்தகம் ஹஸ்த பூஷணம்' என்பதும் தவறு. ஹஸ்தத்துக்குப் பூஷணம் (கைக்கு அலங்காரம்) நல்ல சில்க் சட்டை, ஜோரான பச்சைக் கல் மோதிரம். நான் புஸ்தக மூட்டை தூக்கிக் கொண்டு பள்ளிக் கூடத்துக்குப் போனதேயில்லை. சட்டை ஜெபியில் சில கடிதங்கள்; ஒரு பென்ஸில். இவைதான் இருக்கும். வாத்தியார் பாடம் சொல்லிக் கொண்டிருப்பார். அவரைப் பற்றி ஹாஸ்யக் குறிப்புகள் வசனத்திலும், பாட்டிலும் எழுதி அடுத்த பையனிடம் நீட்டுவேன். இருவரும் சிரிப்போம். பிறகு பெஞ்சு பூராவும் பரவி விடும். ஒரே சிரிப்பு; 'என்ன சத்தம்?' என்று வாத்தியார் கேட்கும் முன்னரே வகுப்பிலிருந்து மெதுவாக நழுவிவிடுவேன். வீட்டுக்கு வந்து மாடியேறி கங்காப் பிரவாகத்தைப் பார்த்துச் சிரிப்பேன். இதுதான் நான் படித்த கதை.''

கங்கையாற்றின் கரையிலமர்ந்துகவிதை எழுதுவதும், தான் கற்ற இந்துஸ்தானி இசைப்பாடல்களை வாய்விட்டுப் பாடுவதும், படகுகளில் ஏறிப்பயணம் செய்வதும், பாரதியின் பொழுது போக்குகள். (1) பூணூலைக் கழற்றி எறிந்து விட்டதும், குல ஒழுக்கங்களுங் குன்றி, எல்லாச் சாதியாரோடும் கைகோர்த்துக்கலந்து பழகுவதும், காலில் 'பூட்சு' அணிந்திருப்பதும் பாரதியின் புதிய நடவடிக்கைகள். மனைவியின் வேண்டுகோளால் பாரதியை அவ்வப்போது மன்னித்த கிருஷ்ணசிவன் ஒருநாள் மட்டற்ற சினங்கொண்டதற்குக் காரணம், பாரதிஅந்தணர்க்கின்றியமையாத குடுமியை எடுத்து விட்டு வங்காளி போல் கிராப்பும் மீசையும் வைத்துக் கொண்டு காட்சியளித்ததுதான். இதனால் பாரதியைத்தனக்கருகில் அமர்த்தி உண்ணும் நிலையைக் கிருஷ்ணசிவன் தவிர்த்தார். அவரது நடவடிக்கைகளில் தலையிடாது, நாளடைவில் வெறுப்புக் கொள்ளவும்தொடங்கினார். மாடியில் பாரதிக்குத் தனியறை தரப்பட்டது.

இந்நிலையில் இரண்டு, மூன்று மாதங்கள் கடந்தன. மார்கழி மாதம் திருவாதிரை நாள் வந்தது. பெருந்திரளாக வந்த மக்கள் முன்னிலையில் மடத்தில் ஆராதனைகள், பூசைகளைச் சிறப்பாக நடத்தினார் சிவன். ஆனால், வழக்கமாகத் திருவெம்பாவை சொல்லும் ஓதுவார் அன்று வராதது பெருத்த ஏமாற்றமாயிற்று. திருவெம்பாவை சொல்லாமல் எப்படித் தீப ஆராதனையை முடிப்பது? தன் மருமகளுக்குத் தெரியுமென்றாலும் 'பெண்கள்பாடுவதுமுறையல்லவே?' என்று சிவன் வருந்தினார். ஆனால் அத்தை குப்பம்மாள் பாரதியின் 'கிராப்பு'த்தலை மறையப் பட்டுத்தலைப்பாகை கட்டி, விபூதியைப் பட்டைபட்டையாகஇட்டு, உருத்திராட்சக் கண்டிகையைக் கழுத்தில் அணிவித்து, அழைத்துவந்து திருவெம்பாவை பாடச் செய்தார். பின் பாரதியும், இன்னொரு அம்மையாரும் சேர்ந்து ''பார்க்கப் பார்க்கத் திகட்டுமோ உன்பாத தரிசனம்'' என்னும் நந்தன் சரித்திரக் கீர்த்தனையைப் பாடினார்கள். கேட்டவர் மெய்ம்மறந்தனர். விழா சிறப்புறமுடிந்தது. கிருஷ்ணசிவனுக்கு வியப்பாயிற்று. பாரதியைத் தழுவி, ''அப்பனே! இவ்வளவு சிறு வயதில் உனக்கு எவ்வளவு ஞானம் ஏற்பட்டுவிட்டது! நாங்கள் வெறும் ஆஷாடபூதிகளே! எங்களுக்குத்தான் குடுமியும், வேதியர் வேஷமும் வேண்டும். உன்னைப் போல் உண்மையான மனம் உடையவருக்குக் குடுமியும், பூணூலும் வேண்டாம்'' என்று புகழ்ந்தார். (2) அன்றிலிருந்து மீண்டும் கிருஷ்ணசிவனுக்கு அருகமர்ந்து உண்ணும் தகுதி பாரதிக்குத் திரும்பக் கிடைத்ததெனச் சொல்லவும் வேண்டுமோ?

பாரதி, ஒருவாறாக 'சென்ட்ரல் இந்துக் கல்லூரி' வாயிலாக, அலகாபாத் 'மெட்ரிகுலேஷன்' தேர்வில் முதல் வகுப்பில் தேறினார். எப். ஏ. வகுப்பிலும் சேர்ந்தார். எனினும், அவரது வாழ்வு மீண்டும் திசைமாறிற்று. அப்போது காசியில் தங்கியிருந்த அன்னிபெசன்ட் அம்மையாரின் கொள்கைகளில் ஈடுபட்டு அவருடன் உரையாடுதற்கு அடிக்கடி செல்லலானார். மேலும், பதினெட்டு வயது இளங்காளையாம் நம் கவிஞரை, அப்போதைய அரசியல் விடுதலை இயக்கமும் ஈர்க்கத்தொடங்கிற்று.

கி. பி. 1800 ஆம் ஆண்டளவில் நாட்டின் பொருளாதாரம் மிகவும் சீர்கெட்டிருந்தது. பாதிப்பேர் உழவர்களாகவும், மீதிப்பேர் நெசவு, தச்சு, சாயம் காய்ச்சுதல் போன்ற எளிய குடிசைத் தொழிலாளர்களாகவுமே வாழ்ந்தனர். தொடர்ந்த பஞ்சங்கள் காரணமாக உழவுத் தொழிலும் நசிந்தது. கைத்தொழிலின்இடத்தையும் வெள்ளையர் துவக்கிய ஆலைத்தொழில் பற்றிக் கொண்டது. வெள்ளையராட்சியில் இந்தியர்கள் நேரடியாகக் கொடுமைப் படுத்தப் படாவிடினும், நாட்டின் செல்வம் சுரண்டப்பட்டு, அடிமைத்தனம் மெல்ல மெல்ல இடம்பிடிக்க, மக்களின் வாழ்க்கைத்தரம்குறையத் தலைப்பட்டது. அதே நேரத்தில் வெள்ளையர் ஏற்படுத்திய ஆங்கிலக்கல்வியைக் கற்ற ஒரு சில கூர்த்த மதியினர் வெளிஉலகநிகழ்ச்சிகளை அறியத் தலைப்பட்டு சுதந்திரஉணர்ச்சி மிக்கவராயினர். சுதந்திரத்திற்காக அமெரிக்கா போராடிய செயல்கள், பிரெஞ்சுப்புரட்சியை ஒட்டிய செய்திகள், கரிபால்டி, மாஜினிபோன்ற தலைவர்களின் முழக்கங்கள், ஷெல்லி, பைரன், தோரோ, எமர்ஸன், டால்ஸ்டாய், கார்க்கி போன்றாரின் உரிமைக் கருத்துள்ள கலைப் படைப்புக்கள் இவற்றையெல்லாம் கற்றுத்தெளிந்த அறிஞர்கள், தம் நாடு கண்ணை மூடிக் கொண்டு

[5-ம் பக்கம் பார்க்க]

சு. சண்முகம் எம். ஏ.

# திருவள்ளுவர் ஒரு பௌத்தரே

சாகித்ய வாகீஸ்வராச்சாரிய வித்தியா வாசஸ்பதி

— சார்ள்ஸ் த சில்வா —

திருவள்ளுவர் ஒரு மதத்தைச் சார்ந்தவரா? இது இன்னும் ஆராய்ச்சிக்குரிய விஷயமாகவே இருக்கிறது. பலரும் வள்ளுவர் தங்கள் சமயத்தைச் சார்ந்தவரே எனக் கூறுகின்றனர். வள்ளுவர் பௌத்தர் தான் என்கிறார் சிங்களப் பேரறிஞர் சார்ள்ஸ் த சில்வா. இலங்கைக்கு பௌத்தம் வருவதற்கு முன்னரேதமிழ் நாட்டில் அது செழிப்புற்று வளர்ந்திருந்ததென்றும் திருவள்ளுவர் ஒரு பௌத்தர் என்பதற்கு ஆதாரங்கள் பல உண்டு என்றும் அவர் கூறுகிறார். திருக்குறளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்தவரும் பகவத் கீதையை சிங்களத்தில் மொழிபெயர்த்துக் கொண்டிருப்பவருமான சாகித்திய வாகீஸ்வராச்சார்ய வித்தியா வாசஸ்பதி சார்ள்ஸ் த சில்வா, சங்கானை அரசடி வயிரவர் ஆலய முன்றலில் சென்ற மாதம் 23-ந் திகதி நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டில் நிகழ்த்திய உரையின் சாரமே இங்கு கட்டுரையாகத் தரப்படுகிறது.

**நா**ன் தமிழில் பேச முடியாதிருப்பதற்கு மன்னிப்புக் கோருகிறேன். என்னுடைய தமிழறிவு புத்தகம் படிக்கக்கூடிய அளவானதே தவிர துரதிர்ஷ்டவசமாக மேடையில் பேசக்கூடிய தகுதியானதல்ல. நான் தமிழை லாவகமாகப் பேசப் பழகிக் கொள்வதற்காகத் தமிழ் பேசும் பிரதேசத்தில் ஓரிரண்டு வருடங்களாவது வாழவேண்டுமெனக் கனவு கண்டேன். அந்தக் கனவு இன்னும் நினைவாகவில்லை. இப்பொழுதும், இந்த வயது போன நிலையிலும் அப்படியான சந்தர்ப்பம் கிடைக்குமானால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்.

எனக்குத் தரப்பட்ட விடயம் 'பௌத்தமும் திருக்குறளும்' என்பதாகும். குறிக்கப்பட்ட ஒரு நேரத்தில் இப்படியான ஒரு மாநாட்டில் இந்தப் பரந்த விடயத்தை அலசி ஆராய்வதென்பது கடினமே.

தட்சணபாரதம் அல்லது தமிழ் அகம் என்று அந்நாளில் அழைக்கப்பட்ட பிரதேசத்தில் வழங்கிய இரு சமயங்களை நான் இங்கு ஆராய முற்படுகிறேன்.

அந்நாளில் விந்திய மலைக்குத் தென்பகுதியில் உள்ள முழுப் பிரதேசமும் தமிழ் நாடே என வழங்கப்பட்டது. தமிழ் நாட்டில் அப்பொழுது பௌத்தம் ஒரு

## மூன்று ரொட்டிகள்

**பெ**ரிய விருந்து. பெரும் புள்ளிகளுக்கு மட்டுமே அழைப்பு. மேல் நாட்டுமுறை விருந்து. கீழைநாட்டுப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர், ஆம் மணி மணியாகப் பொறுக்கியெடுக்கப்பட்டவர்கள். விருந்தின் பின் பேச்சு. இதுவும் மேல் நாட்டுச் சம்பிரதாயம்.

ஆங்கிலேயர் ஒருவர் எழுந்து பேசினார். அவர் தம் இனத்திடம் அபாரப் பற்றுடையவர். தங்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் உலகில் இல்லை என்ற அபிப்பிராய முடையவர். தம்பேச்சிலும் இவ்வெண்ணம் தொனிக்கப் பேசினார். ''ஆண்டவனுக்கு எங்கள் இனத்திடம் அபாரப்பற்று. அதனால்தான் எங்கள் இனத்தைப்பிரியாசைப்பட்டு வெள்ளை நிறத்தில் படைத்திருக்கிறார்'' என்றார்.

நம் தென்னாட்டைச் சேர்ந்த ஒருவர் அவ்விருந்தில் இருந்தார். அவருக்கு ஆங்கிலேயரின் இப்பேச்சுப் பிடிக்கவில்லை. 'எல்லோரும் ஓரினம் ஆண்டவனுக்கு. இம்மிகூட வேற்றுமை உணர்வு கிடையாது'' என்ற சீரியகொள்கையுடையவர் அவர். அவர் எழுந்தார். நண்பர்களே! எனக்கு முன் பேசியவரின் பேச்சை முற்றிலும் ஆமோதிக்கிறேன். ஆனால் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஆண்டவனுக்கு திடீரென ரொட்டி சுடவேண்டுமென்ற ஆசை வந்தது. ஆண்டவனுக்கு ஆசை தோன்றலாமா என்று கேட்காதீர்கள். ஆசையும் ஆசையின்மையும் அவ

# கே. பி. எச்.

அன்புள்ள சரஸ்,

**ந**டப்பதெல்லாம் நன்மைக்கே, எல்லாம் அவன் செயல் என்ற நம்பிக்கை அந்த இளம் வயதில் எனக்கில்லை. இந்தப் பொல்லாத குரங்கு மனம் இருக்கின்றதே, இது பிறர் செய்த நன்மைகளையெல்லாம் மறந்துவிட்டு செய்யாத ஒரு தீமையைக் கற்பனை செய்து

கொண்டு, மாலையில் தங்கசாலைத் தெருவழியாகக் குறிக்கோளில்லாமல் நடந்து சென்றேன்.

கால் எங்கே கொண்டு சேர்த்தது தெரியுமா? அங்கேயிருந்த ஓர் இலவச வாசகசாலைக்குத்தான். சென்னை நகரிலே தெருவுக்குத்தெரு இப்படியான வாசகசாலைகள் இருக்கும். பல தமிழ், தெலுங்கு, ஆங்கிலப் பத்திரிகை

ஒரு வார்த்தையும் கூறவில்லை. எல்லாம் மறுநாள் வரை மனதுக்குள்ளாகவே அடக்கிவைத்துக்கொண்டேன். இரவில் தூக்கம் சரியாக வரவில்லை. எப்போது விடியப்போகிறதென்று ஆவலுடன் காத்திருந்தேன்.

காலையில் எழுந்து கண்ணன் படத்தைக் கும்பிட்டுவிட்டு, 'சுயராஜ்யா' காரியாலயத்துக்குப் புறப்பட்

ராஜ்யா' ஆசிரியர் இருக்குமிடம் தேடிச் சென்றேன். அது ஒரு சிறிய அறை. ஒரே ஒருவர்மட்டும்தான் அங்கு இருந்தார். முன்பின் தெரியாத என்னை சிரித்துக்கொண்டே வரவேற்று அன்புடன் விசாரித்தார், ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி. 'தமிழ் நாடு' பத்திரிகையில் வேலை செய்ததாகக் கூறியதுமே, சோதனை எதுவுமின்றி

தினசரிப் பத்திரிகையையும் நடத்திவந்தனர். 'ஹிந்து' பத்திரிகை எக்கட்சிச்சார்பு மற்றது. மகாத்மா காந்தி அடிகளின் தலைமையிலே, நாட்டின் விடுதலைக்காகப் பல பல இயக்கங்கள் நடந்தன முதலில் ஒத்துழையா இயக்கம். வெள்ளைக்கார ஆட்சிக்கு வரி கொடுக்கக் கூடாது; நீதிமன்றங்களையும் பள்ளிக்கூடங்களையும் பகிஷ்

லாம்'' என்றார். பொலிஸ் அதிகாரி இதைக் கண்டு அரண்டுபோனார். துப்பாக்கிப்பிரயோகமில்லை. மக்கள் தப்பினர். தன் உயிரைத் துரும்பாகமதித்த அப்பேர்ப்பட்ட தீரர் பிரகாசம், பல தலைவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து காங்கிரஸ் தேசீய இயக்கத்துக்காக ஆரம்பித்ததே சுயராஜ்யாபத்திரிகை ஸ்தாபனம் பொதுமக்களி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதும் யாத்திரைக் கடிதங்கள் - 10

அன்புள்ள சரஸ்,

நடப்பதெல்லாம் நன்மைக்கே, எல்லாம் அவன் செயல் என்ற நம்பிக்கை அந்த இளம் வயதில் எனக்கில்லை. இந்தப் பொல்லாத குரங்கு மனம் இருக்கின்றதே, இது பிறர் செய்த நன்மைகளையெல்லாம் மறந்துவிட்டு செய்யாத ஒரு தீமையைக் கற்பனை செய்துகொண்டு அவர்கள்மீது பொல்லாங்கு கூறி, நம்மை எப்படி எல்லாம் ஆட்டி வைக்கிறது தெரியுமா? முன்பின் அறியாத, அனுபவம் சிறிதுமற்ற எனக்குத் தமது பத்திரிகைக் காரியாலயத்தில் இடம் கொடுத்து, பணம் கொடுத்து ஒவ்வொரு நாளும் மேலான பயிற்சியும் அளித்த அத்தேசிய வீரருக்கு, என் முதல் குருவுக்கு நன்றி சிறிதும் செலுத்தாமல், ஏதோ ஓர் அவசிய காரணத்தால், வேலையிலிருந்து விலகும்படி செய்த அவர்மீது எவ்வளவு கசப்பும் வெறுப்பும்! பிராமணனாகப் பிறந்ததால்தான் இந்தக் கதி ஏற்பட்டதென்பது மனதின் மற்றொரு கற்பனை. உலகிலே நாம் ஒருவர்தான் நல்லவர், கெட்டிக்காரர், மற்றவரெல்லாம் மட்டம் என்ற அகம்பாவம் வேறு. இவ்விதமான நமது உள்ளப் பிழைகளை உணர்ந்து நடந்துகொள்ளக்கூடிய பண்பு அப்போது சிறிதும் இல்லை. அமைதியற்ற மனத்துடனே என் அறைக்குத் திரும்பினேன்.

வேலை போன சமாச்சாரத்தை வெளியில் சொல்லவும் வெட்கம். 'ஏன் சீக்கிரமாகத் திரும்பிவிட்டாய்' என்று அறையிலிருந்த நண்பர் கேட்டபோது, ''சுகமில்லை'' என்று வாய் கூறியது. மனதுக்குள்ளே தாங்க முடியாத கனம். சுவரோடாயினும் சொல்லி அழ என்பர். மனப்பளுவு தீர்ந்தால் தானே மேலே காரியம் எதுவும் செய்ய முடியும். என் அன்னையார் கொடுத்த கண்ணன் படம்தான் எனக்கு ஒரே ஒரு தஞ்சம். யாரும் அறியாமல் அப்படத்திடம் கண்ணீர் விட்டு அழுதேன். வேலையோ கிடைக்காது, கிடைத்த வேலையையும் இப்படி இழப்பதாயின், எவ்வளவு அதிர்ஷ்டக்கட்டையாக இருக்கவேண்டும்! இயற்கைச் சூழலிலே தனித்து அமர்ந்திருந்த அக்கண்ணன் வாயில் புல்லாங்குழல் வைத்து ஊதிக்கொண்டிருக்கிறார். அழுத எனக்கு ஒரு ஆறுதலும் சொல்லவில்லை. என்னை நானே தேற்றிக்கொண்டு, மாலையில் தங்கசாலைத் தெருவழியாகக் குறிக்கோளில்லாமல் நடந்து சென்றேன்.

கால் எங்கே கொண்டு சேர்த்தது தெரியுமா? அங்கேயிருந்த ஓர் இலவச வாசகசாலைக்குத்தான். சென்னை நகரிலே தெருவுக்குத்தெரு இப்படியான வாசகசாலைகள் இருக்கும். பல தமிழ், தெலுங்கு, ஆங்கிலப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் இருந்தன. வேலை தேடும் வாலிபர்கள், ஒவ்வொரு பத்திரிகையிலும் ''தேவை'' பத்தியைத்தான் முதலில் படிப்பர். அங்கு மேசைமேல் 'சுயராஜ்யா' ஆங்கிலத் தினசரிப் பத்திரிகை இருந்தது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் அப்பத்திரிகை முன்னணியில் நின்று வீர முழக்கம் செய்துவந்தது. 'ஆந்திர கேசரி' என்று புகழ் பெற்ற பிரகாசம் அவர்கள் அதன் ஆசிரியர். வாலிபர் சங்கக் காரியதரிசியாக இருந்தபோது அப்பத்திரிகையை வரவழைத்து ஒழுங்காகப் படிப்பதுண்டு. 'பத்திரிகை அனுப்புங்கள்' என்று ஒரு கடிதம்தான் எழுதினேன். மாதக்கணக்காக, எங்கள் சங்கம் நின்ற பிறகும்கூட, பத்திரிகை தினம் தினம் வந்துகொண்டே இருந்தது! 'சந்தா கட்ட வேண்டும்' என்று ஒரு கடிதமும் இல்லை. அவ்வளவு நிர்வாகத் திறமை! நாங்களே சந்தா அனுப்பியிருக்கலாம். ஏனோ அப்படிச் செய்யவில்லை. ஆகவே அப்பத்திரிகையைக் காணும்போது, ஒருவித அனுதாபமும் பழைய நண்பனைக் கண்டதுபோலும் இருந்தது. பிரித்துப் பார்த்தேன்.

''தேவை. தமிழ் 'சுயராஜ்யா' வாரப் பதிப்புக்கு ஓர் உதவி ஆசிரியர் அவசரமாகத் தேவை. அனுபவம் உள்ளவர்கள் உடன் விண்ணப்பிக்கவும்'' என்று ஒரு விளம்பரம் பளிச்சென்று என் கண்களில் பட்டது. உண்மைதானா? என் கண்களை நம்ப முடியவில்லை. பல தடவை படித்துப்பார்த்தேன். உண்மைதான். பத்திரிகைஅனுபவம் ஏற்கெனவே இருக்கிறது. அதுவும் ஒரு தினசரிப் பத்திரிகையில். ஆகவே அந்த வேலை கிடைப்பது அநேகமாக நிச்சயம் என்று மனதில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. அங்கு வழமையாகச் சாப்பிடும் ஓட்டலில் உணவருந்திவிட்டு, என் அறைக்கு விரைந்தேன். வேலை போன விஷயத்தைப்பற்றியோ, புதிய விளம்பரம் பார்த்தது குறித்தோ என் நண்பனிடம் ஒரு வார்த்தையும் கூறவில்லை. எல்லாம் மறுநாள் வரை மனதுக்குள்ளாகவே அடக்கிவைத்துக்கொண்டேன். இரவில் தூக்கம் சரியாக வரவில்லை. எப்போது விடியப்போகிறதென்று ஆவலுடன் காத்திருந்தேன்.

காலையில் எழுந்து கண்ணன் படத்தைக் கும்பிட்டுவிட்டு, 'சுயராஜ்யா' காரியாலயத்துக்குப் புறப்பட்டேன். சென்னையிலே 'தமிழ்நாடு' காரியாலயத்துக்கு சில கஜதூரத்துக்கு அப்பால்தான் ''சுயராஜ்யா'' காரியாலயமுமுள்ளது. அவ்வளவு கிட்ட இருந்தும் ஒருமுறையும் அங்கு சென்றதில்லை. கீழே 'லினோ டைப்' மெஷின்கள் பலவும் மும்முரமாக வேலை செய்துகொண்டிருந்தன. 'லினோ டைப்' என்றால் உனக்குத் தெரியும் தானே. அச்சு எழுத்துக்களை ஒவ்வொன்றாகக் கையால் கோர்த்து அடுக்குவதற்குப் பதில், அந்த மெஷின் முன் ஒருவர் அமர்ந்து, 'டைப்' அடிப்பதுபோல் தட்டுகிறார். உடனுக்குடன் வரிவரியாக ஈய எழுத்து வந்து விழுகிறது. அந்த மெஷினில் ஈயம் ஒரு புறம் மின்சக்தியால் உருக்கப்படுகிறது, தட்டச்சுப்போல் அடிக்க அடிக்க, உருகிய ஈயம் அச்சுவார்ப்பில் எழுத்தாக உருவாகி, வரிவரியாக வந்து விழுவதை முதல் முதலில் பார்க்க மிக வியப்பாக இருந்தது. ஒரு மெஷின் கிட்டத்தட்ட ஒரு லட்ச ரூபாயாம். இப்படிப் பல மெஷின்கள் அங்கு வேலை செய்தன. ''தமிழ் நாடு'' பத்திரிகையில் இந்த வசதி இல்லை. வேறு எந்த தமிழ் தினசரிகளிலும் இந்த மெஷின் அப்போது கிடையாது. பிறகு முதல் முதலாக 'சுதேசமித்திரன்' பத்திரிகைதான் தமிழில் ''லினோ டைப்' மெஷின்களை வாங்கிப் பயன்படுத்தியது. இப்போது சென்னையிலே பிரபல தமிழ்ப் பத்திரிகைகளெல்லாம் இவ்வித நவீன மெஷின்களைப் பயன்படுத்துகின்றன. பலருக்கு வேலையில்லாதுபோகிறதுதான். என்றாலும் மெஷின் யுகத்தில் அபிவிருத்தியின் பெயரால், ஆட்களே இல்லாமல் பத்திரிகை வெளிவரவும் கூடும்!

ஃ ஃ ஃ

மச்சின்மேல்தான் ஆசிரியப்பகுதி. தமிழ் 'சுயராஜ்யா' ஆசிரியர் இருக்குமிடம் தேடிச் சென்றேன். அது ஒரு சிறிய அறை. ஒரே ஒருவர்மட்டும்தான் அங்கு இருந்தார். முன்பின் தெரியாத என்னை சிரித்துக்கொண்டே வரவேற்று அன்புடன் விசாரித்தார், ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி. 'தமிழ்நாடு' பத்திரிகையில் வேலை செய்ததாகக் கூறியதுமே, சோதனை எதுவுமின்றி உடன் வேலைக்கு அமர்த்திவிட்டார். சம்பள விஷயமாகக் கேட்டபோது ஒரு சிறிய பொய் சொன்னேன். முந்திய பத்திரிகையில் 60 ரூபாய் கொடுத்ததாகக் கூறியதும், அதே சம்பளத்தை இங்கும் அளிப்பதாகச் சொன்னார். மற்றெல்லாப் பத்திரிகாலயத்திலும் உதவி ஆசிரியர்களுக்கு அதிக சம்பளமென்று கேள்விப்பட்டதால்தான் தைரியமாக அந்தப் பொய்யைச் சொன்னேன். அவ்வளவு சுலபமாக அதிக சம்பளத்தில். புதிய வேலை கிடைக்க முடிந்ததை என்னால் நம்பவே முடியவில்லை.

முதல் நாள்தான் 'தமிழ்நாடு' வேலை போயிற்று. மறுநாளே தமிழ் 'சுயராஜ்யா'' பத்திரிகையில் அதிக சம்பளத்துக்கு வேலை கிடைக்கிறது. யாருடைய சிபார்சும் உதவியும் கிடையாது. சென்னையில் எனக்கு உதவக்கூடியவர் யார் இருக்கிறார்கள்? இந்த வேலையும் ஓர் இலவச வாசகசாலையில் கிடைத்த தகவல்மூலம் தற்செயலாகக் கிடைக்கிறது. இது 'தற்செயலா' அல்லது இறைவன் செயலா? தன் செயல்தான் தற்செயலாயிற்றென்பர். எல்லாம் அவன்செயல் என்பது, இவ்வளவு காலத்துக்குப்பின்வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போதுதான் நன்குஉணர முடிகின்றது. அவன் கருணைதான் எவ்வளவு!

ஃ ஃ ஃ

சுயராஜ்யா பத்திரிகை வியாபார நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதன்று. அக்காலத்தில் அநேகமாக எல்லாத்தேசீயப் பத்திரிகைகளும் தேசீய விடுதலைப் போராட்டத்தின் ஓர் அணியாகவே இருந்து வேலைசெய்தன. ஆட்சிசெலுத்திய வெள்ளைக்காரர்கள் ஆங்காங்கே ஆங்கிலப்பத்திரிகைகளை நடத்திவந்தனர். சென்னையில் 'மதராஸ் மெயில்' அவ்விதமான பத்திரிகையாகும், ஜஸ்டிஸ் கட்சியினர் 'ஜஸ்டிஸ்' என்ற தினசரிப் பத்திரிகையையும் 'திராவிடன்' என்ற தமிழ்த் தினசரிப் பத்திரிகையையும் நடத்திவந்தனர். 'ஹிந்து' பத்திரிகை எக்கட்சிச்சார்புமற்றது. மகாத்மா காந்தி அடிகளின் தலைமையிலே, நாட்டின் விடுதலைக்காகப் பல பல இயக்கங்கள் நடந்தன முதலில் ஒத்துழையா இயக்கம். வெள்ளைக்கார ஆட்சிக்கு வரி கொடுக்கக் கூடாது; நீதிமன்றங்களையும் பள்ளிக்கூடங்களையும் பகிஷ்கரிக்கவேண்டும் என்பதே அதன் முக்கிய வேலைத்திட்டம். இந்த இயக்கத்தில் சேர்ந்து பலர் பல பெரிய தியாகங்கள் செய்தனர். ராஜாஜிக்கும், பாரிஸ்டர் பிரகாசத்துக்கும் வழக்கறிஞர் என்ற முறையில் மாதம் பல்லாயிரக்கணக்கான வருமானமுண்டு. மகாத்மாவின் ஆணையின்படி அவர்கள் அத்தொழிலைவிட்டு, வெள்ளைக்கார ஆட்சியின் நீதிமன்றங்களைப் பகிஷ்கரித்தனர். தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களிலிருந்து அகற்றினர். சிறை சென்றனர் இன்று நாமெல்லாம் அரசியல் சுதந்திரத்துடன் வாழுகின்றோமென்றால், அதற்கு அவர்கள் போன்ற தியாக வீரர்களே காரணமாவர். எவ்வளவுபேர், எவ்வளவு கஷ்டப்பட்டுகிடைத்த சுதந்திரம் தெரியுமா இது. நம்மில் சுயநலமிகள் சிலர், பணத்துக்காகவும், பதவி வேட்டைக்காகவும் அரசியலில் புகுந்து செய்யும் விஷமங்களை அத்தியாகவீரர்கள் காணும்போது அவர்களுக்கு எப்படி இருக்கும்.

அடுத்தபடியாக இந்தியாவுக்குப்புதிய அரசியல் சீர்திருத்தத் திட்டம் அளிக்க சைமன் என்பவர் தலைமையில் ஒருகமிஷனை பிரிட்டன் அனுப்பிவைத்தது. அதில் இந்தியர் ஒருவருமில்லாததாலும் இந்தியரின் அரசியல் தலைவிதியை அந்நியர் நிர்ணயிப்பது சுயமரியாதையாகாதென்றும், இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபை, மகாத்மாவின் தலைமையில், அக்கமிஷனை பகிஷ்கரித்தது. ''சைமனே திரும்பிப்போ'' என்ற கோஷங்கள் நாடெங்கும் கிளம்பின. சென்னையில் ஹைகோர்ட்டுக்குப் பக்கத்தில் பெருங்கூட்டம். கூட்டத்தின் மீது துப்பாக்கியால் சுட பொலிஸ் அதிகாரி உத்தரவிட்டார். அச்சமயம் ஆந்திரகேசரி பிரகாசம் அவர்கள் பொலிஸ் அதிகாரியின்எதிரில் நின்று சட்டையைக் கைகளால் விலக்கித் தன் மார்பைக்காட்டி ''முதலில் என்னைச் சுடுங்கள்; பிறகு கூட்டத்தைச் சுட...'' அதிகாரி இதைக் கண்டு அரண்டுபோனார். துப்பாக்கிப்பிரயோகமில்லை. மக்கள் தப்பினர். தன் உயிரைத் துரும்பாகமதித்த அப்பேர்ப்பட்ட தீரர் பிரகாசம், பல தலைவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து காங்கிரஸ் தேசீய இயக்கத்துக்காக ஆரம்பித்ததே சுயராஜ்யாபத்திரிகை ஸ்தாபனம் பொதுமக்களிடையே தீவிரமாகப் பிரசாரம் செய்ய தமிழிலும் ஒரு தினசரிப் பத்திரிகைவேண்டும் என்று ராஜாஜியின் தலைமையிலிருந்த தமிழ்நாடு காங்கிரஸ், சில ஆயிரம் ரூபாய் உதவி, ''ஸ்வராஜ்யா'' என்ற தமிழ்த் தினசரியும் ஆரம்பிக்கப்பெற்றது. சுவாமி சுத்தானந்த பாரதியார், திருகூடசுந்தரம்பிள்ளை, வ. ரா. எனும் ராமசாமி அய்யங்கார் முதலியோர் அத்தினசரிஆசிரியர் குழுவில்சேர்ந்து ஒரு தேசீயப் பணியாகத் தொண்டாற்றினர். வ. ரா. தினசரி 'கதர் பத்தி' என்று கதர் இயக்கத்தைப்பற்றி எழுதி வந்தார். பெரும் வீரர்கள் பணிசெய்த அப்பத்திரிகை நிர்வாகம் சரியில்லாத காரணத்தால் நஷ்டத்தில் நடந்து, வாரப்பத்திரிகையாயிற்று. அதில் கடைசியாக ஆசிரியர் பொறுப்பேற்று நடத்திய கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தான் என்னை அன்று நியமித்தது. 36 வருடங்களுக்குப் பின் சமீபத்தில் அவரை சென்னையில் சந்தித்தேன்.

ஆசிரிய பகுதியில் சுதேசமித்திரன் பத்திரிகையில் பணிசெய்கின்றார். வெகு காலத்துக்குப்பின்சந்திக்கும் இருவருக்கும் சொல்லமுடியாத மகிழ்ச்சி. தேசீய விடுதலைப்போராட்டத்தின் ஓர் முக்கிய அரங்கமாகக் கொண்டு பத்திரிகைப்பணியைச்செய்தபலதியாக வீரர்களின்அடிச்சுவட்டிலே, பல அறிஞர்களிடையே அந்தப் பெரியஸ்தாபனத்தில் சேர்ந்துதொண்டாற்றவும் பல புதிய பயிற்சிகளும் அனுபவமும்பெற துணைசெய்யவுமே திருவருள் 'தமிழ்நாடு' காரியாலயத்திலிருந்து என்னை வெளியேற்றியதென்ற உண்மைபுலப்பட எனக்கு வெகு காலமாயிற்று. இன்னல் போன்று பயமுறுத்தி நன்மையேசெய்யும்அவரது திருவிளையாடலின் மகிமைதான் என்ன!

உன் அன்புள்ள,

**அப்பா.**

---

தமிழ் அகம் என்று அந்த நாளில் அழைக்கப்பட்ட பிரதேசத்தில் வழங்கிய இரு சமயங்களை நான் இங்கு ஆராய முற்படுகிறேன்.

அந்நாளில் விந்திய மலைக்குத் தென்பகுதியில் உள்ள முழுப் பிரதேசமும் தமிழ் நாடே என வழங்கப்பட்டது. தமிழ் நாட்டில் அப்பொழுது பௌத்தம் ஒரு பிரபலமான சமயமாக விளங்கியது. தமிழ் நாடு பல பெரிய பௌத்த அறிஞர்களையும் இலக்கிய மேதைகளையும் உருவாக்கியுள்ளது. அந்த மேதைகள் பௌத்த இலக்கியத்திற்குச் செய்த தொண்டு மிகப் பெரியது. பௌத்த சமயத்தின் ஒரு மிகப் பெரிய வித்தகனாக விளங்கிய தர்மபால அவர்கள் ஒரு சோழனாகும். தமிழ் பௌத்தர்களிடம் மிகப் பெரிய இலக்கிய மேதைகளையும் இலக்கண வித்துவான்களை காணலாம். வீரசோழியம் என்ற உன்னத காவியத்தை இயற்றிய பௌத்த மித்திரன் என்பார் இதற்கோர் உதாரணமாக விளங்குகின்றார். நாங்கள் இழந்துவிட்ட குண்டலகேசியைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. இங்கே இலங்கையில்கூட சிங்கள இலக்கியத்திற்கும் பௌத்த மதத்திற்கும் தமிழ் பௌத்தர்கள் செய்த தொண்டுகளை நாம் மறக்க முடியாது. சிங்கள இலக்கணமான ''சிதற் சங்கர'' என்ற சிங்கள நூலை இயற்றிய ஆசிரியன் அனவாமதர்சின் என்ற கேரள திராவிடனே.

## உண்மைகள் மறைக்கப்படுகின்றன

சிங்கள மொழி அமைப்பு வல்லுனரான நான்முருதுன் என்பார் ஆறுவது பராக்கிரமபாகுவின் அமைச்சராகவும் மருமகனாகவுமிருந்தார். அவர் ஒரு பாண்டியன் ஆவார். அவர் இயற்பெயர் சுந்தர பாண்டியன். இவர் பராக்கிரமபாகு மன்னரின் ஒரே மகளான சந்திராவதி என்பவளை மணந்து முடிசூட்டு விழாவின்போது அவளுக்கு உலகுடை எனத் தமிழில் நாமகரணம் செய்தான். இவை போக இங்கே இருந்த சங்க ராஜாக்கள் எல்லோரும் சோழர்களேயாகும். சிலாவம்சம் என்ற நூலை இயற்றியவனும் கஸ்டரெனியா என்ற அரசை அமைத்தவனுமான மூன்றுவது ஜெயபாகு என்ற சோழன்தான். மிகப் பிரபலமான சத்ததர்மலங்கராயா என்ற காவியத்தை இயற்றியவனுமாவான். இதிலிருந்து தமிழ் அறிஞர்கள் சிங்கள இலக்கியத்திற்கும்

[5-ம் பக்கம் பார்க்க]

---

பேசியவரின் பேச்சை முற்றிலும் ஆமோதிக்கிறேன். ஆனால் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஆண்டவனுக்கு திடீரென ரொட்டி சுடவேண்டுமென்ற ஆசை வந்தது. ஆண்டவனுக்கு ஆசை தோன்றலாமா என்று கேட்காதீர்கள். ஆசையும் ஆசையின்மையும் அவனைப் பொறுத்தவரை ஒன்றுதான். கோதுமை மாவைப் பிசைந்து வைத்துக்கொண்டு அடுப்பைப் பற்றவைத்தார். இரும்புச் சட்டியை ஏற்றி ரொட்டி சுட்டார். இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் எடுத்தார். ஒரே வெளுப்பாக இருந்தது. நன்றாக வேகவுமில்லை. அதை இந்த ஆங்கிலேயர்களுக்கு கொடுத்துவிட்டார். இவர்கள்நல்ல வெள்ளை நிறமாக இருப்பதற்கு இதுவே காரணம். அடுத்த ரொட்டியைச் சுடும்போது அவசரத்தைக் கைவிட்டு நிதானத்தை மேற்கொண்டார். அதிக நேரம் இருந்தால் ரொட்டி நன்றாய் வேகும் என்று தோன்றியது. அளவுக்கு அதிக நேரம் அடுப்பில் வைத்துவிடவே ரொட்டி கருகிவிட்டது. அதை நீக்ரோக்களுக்கு கொடுத்துவிட்டார். அதுதான் அவர்கள் நிறம் மிகவும் கறுத்துவிட்டது. 'அட நமக்குரொட்டிகூடவாசுடவரவில்லை' என்று ஆண்டவனுக்கே வெட்கமாகப் போய்விட்டது. இரண்டு ரொட்டிகள் சுட்ட அனுபவம் சீக்கிரமாகவும் எடுக்கக்கூடாது. அதிக நேரம் அடுப்பில் விடவும்கூடாது என்ற பேருண்மையை கற்றுக்கொடுத்தது. மூன்றாவது ரொட்டியை ஜாக்கிரதையாக எடுத்தார். அது அரை வேக்காடும் இல்லை. கருகிவிடவும் இல்லை. உண்ணவும் மிக ருசியாகவும் இருந்தது. அதை இந்தியர்களுக்குக் கொடுத்து விட்டார். பாரத மக்களின் பிறப்பு அனுபவ வாயிலாக ஏற்பட்டது. எனவே ஆண்டவனையும் அறிந்து உலகினரையும் சமமாகப் பாவிக்கும் அறிவுபெற்றிருக்கிறார்கள்'' என்றார். விருந்தினரிடையே பலத்த கரகோஷம் எழுந்தது. இப்படி பாரதத்தின் பெருமைக்குப் பெருமை சேர்த்தவர் யார் தெரியுமா? இந்தியாவின் ஜனாதிபதியாகவிருந்து ஓய்வு பெற்றிருக்கும் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் தான்.

—தகவல்: யோகமணி.

# பசும் புல்

"காங்கேயன்"

அது ஒரு காட்டுப் பாதை. தெருவுக்கு இரண்டு பக்கமும் அடர்ந்த காடு. சனசஞ்சாரம் அரிதாயிருந்தது. நான் வந்த வழியிலிருந்த கொட்டில் கடையும் அதன் காணிக்குள் குவித்திருந்த வைக்கோற் போரும், இன்னமும் என் பார்வையில் தென்படுகின்றன. கடையின் முன்னால் ஒரு மாட்டு வண்டில். அவ்வளவும்தான். இந்த தனிக்காட்டு சூழலில் எனக்கு மனதில்சற்றேதென் பளித்தது, அந்தக்கொட்டில் கடையும் அதைச்சுற்றி நிலவிய சந்தடியுமே. தெருவோரமாக ஓங்கி வளர்ந்து நின்றதொரு பாலைமரத்தின் கீழ் பஸ்ஸின் வரவை எதிர்பார்த்தபடி நின்றேன். அந்தக் கடையில் போய் விசாரித்த போது பஸ் தரிக்கும் இடம் என்று இந்த பாலை மரத்தடியைத்தான் காட்டினார்கள். பஸ்ஸும்வரலாம். யானை, கரடி, புலி கூடக் காட்டுக் குள்ளிருந்து திடீரென்று பாய்ந்து வெளிவரலாம். ஆனால்நான் பஸ்ஸுக்காகத்தான் காத்து நின்றேன். யானை, புலி, கரடியை நிச்சயம் எதிர்பார்க்கவில்லையென்றாலும்மனதில்உள்ளூர அவை பற்றிய திகில் இருந்ததால் அடிக்கடி அந்தகொட்டில் கடைமேல் பார்வையைச் செலுத்தி துணிவை வருவித்துக் கொண்டு நின்றேன். பாலை மரத்தின் மேல் குரங்குகள் கிளைக்குக் கிளை தாவி கிரீச்சிட்டுப் பயங்கரமாகப் பல்லைக்காட்டி விளையாடிக் கொண்டிருந்தன.

அதோ-பஸ்வரும் சத்தம் கேட்கிறது. அடட, அது பஸ்ஸல்ல லொறி-பொதி சுமக்கும் கழுதை. காட்டு விலங்குகள் அது எழுப்பும் பேரிரைச்சலைக் கேட்டாலே காததூரம் ஓடிப்போகும். அத்தனை வேகத்தில் நிலம் அதிரும்படி அது பறந்தோடுகிறது. அதன் பின்னால் ஒரு கார் தார் ரோட்டிலேவழுக்கிக் கொண்டு ஓடுகிறது. முன்னால் போன வாகனத்தின்குட்டியாகவிருக்குமோ? என்னவோ அதைத்துரத்திக் கொண்டு பின்தொடர்வதைப் போலத்தான் ஓடுகிறது. இரண்டும் மின்னல் பளிச்சிட்டு மறைவதுபோல நொடிப் பொழுதில் என் பார்வையிலிருந்து அப்பால் சென்று மறைந்து விட்டன. என்னைச் சுற்றிலும் மறுபடியும் கானகத்தின் அமைதி. பாலைமரத்துக் கிளைகளில் குரங்குகள் தாவிப்பாய்வதால் எழும் காட்டரவம், காற்றுக்கு அசைந்தாடும் புதர் பற்றைகளின் சலசலப்பு...மனதில் அச்சம்...



பஸ் வரவில்லை.

இப்பொழுது இன்னொரு கார் வருகிறது. நிதானமான வேகத்தில் வருகிறபடியால் அது சமீபத்தில் எங்கேயோ இருந்துதான் புறப்பட்டிருக்கவேண்டும். அடடே என்ன அதிசயம் அதைஓட்டி வருபவர் ஒரு பெண். காரில் வேறு ஆட்கள் யாருமில்லை. அவளுக்கு என்ன வயசிருக்குமோ? கிட்டே போய்ப் பார்த்தால்தான் தெரியும். தூரத்து மோட்டார் அதுவும் ஓடிப்போய்க் கொண்டிருக்கிற மோட்டார் பல சமயங்களில் முழுப்பொய் சொல்லி நம்மை ஏமாற்றி விடுகிறது.

இந்த மூன்றாவது மோட்டார் என்னைத் தாண்டி ஒரு பத்துப்பாகை தூரத்தில் போய் மெதுவாக நின்றது. காரைச் செலுத்திச் சென்ற பெண் காரை நிறுத்திவிட்டு என்னைத் திரும்பிப் பார்த்தாள். பஸ் பிரயாணிகள் தரிப்பிடத்தை விட்டு நகர்ந்து மோட்டாரைஅணுகிச் சென்றேன்-"கடவுளே, டாக்டர் அம்மாவா?

காரின் பின்கதவு திறக்கப் பட்டது. மறுபேச்சின்றி உள்ளே ஏறி அமர்ந்தேன். காரின் கதவை அடித்துச் சாத்திவிட்டு திருப்புவளையத்தில் கையை வைத்து காரை மேலே ஓடவிட்டு "என்ன சின்னத்துரை, யாழ்ப்பாணம் பஸ் வரவில்லையா? காலை தொடக்கமாகவா இங்கே காத்து நிற்கிறீர்?" என்று பரிவுடன்விசாரித்தாள் டாக்டர் அம்மா.

காலையிலே ஆஸ்பத்திரிக்கு நோயாளிகளைப்பார்க்கவந்த போது என்னைப்பார்த்துஎல்லாம் விசாரித்துவிட்டு "இனி நீர் வீட்டுக்குப்போகலாம்" என்று டிக்கட் வெட்டிக் கொள்ளும்படி கூறிய அதே டாக்டர்அம்மாதான். கொஞ்சவயசு, வைத்தியக்கல்லூரி படிப்பு முடிந்து வெளியேறி ஓரிரண்டுஆண்டுகள்தான் ஆகியிருக்கும். நான் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு முதல்தடவையாக அவர் முகத்தைப் பார்த்தபோதே சரியாகமட்டிட்டுக் கொண்டேன். நல்ல குணமான பிள்ளை, தங்கப்பவுண்.

"பஸ் வரவில்லை அம்மா. சரியாகப் பத்தரைமணிக்கு மலை பஸ் இந்த இடத்துக்கு வருமென்று சொன்னார்கள். இவ்வளவு நேரமும் நானும் கால்கடுக்க காத்துநின்றதுதான் கண்டமிச்சம்" -டாக்டர் அம்மா கேட்டதற்குப் பதிலளித்தேன்.

"பஸ்ஸில் வந்து கொண்டிருந்த பொழுதுதானே காய்ச்சல் பிடிச்சு உலுப்பினது?"


"ஓம் அம்மா. நான் உடனே ஆஸ்பத்திரிக்கு வரலாமென்று பஸ்ஸை நிற்பாட்டி இறங்கினேன். ஆனால் பஸ் நிண்டதுதான் தெரியும் அதற்குப் பிறகு நடந்த தொண்டும் தெரியாது."

"அப்போ பெரும் அவலப்பட்டுத்தான் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தீர். பஸ்காரர் தான் உம்மை ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள்."

"அவர்களாய்த்தானிருக்க வேண்டும். மலை பஸ்ஸிலே பெரும் பகுதியும் யாழ்ப்பாணத்து ஆட்கள்தானே, அம்மா."

"மலையிலே வேலை பார்க்கிறீரோ! ஏன் காய்ச்சலோடு வெளிக்கிட்டீர்?" - ஆஸ்பத்திரியில் நோயாளர் படுக்கையில் கேட்கத்தவறியஎல்லாவற்றையும் கேட்டறிய முற்பட்டவர் போல டாக்டர் அம்மா அடுக்கடுக்காக இவ் வாறு கேட்கலானார்.

நின்றார். நான் காரில் ஏறாமல் அவர் அருகே நின்றேன். இயந்திரப் பகுதிக்குள் சென்று துளாவின என் கண்கள். தார் ஊற்றி மெழுகிய அந்தத் தெருவின் விளிம்பில் தலை நீட்டி நின்ற இரு பசும்புல் அப்பொழுது என் கவனத்தைக் கவர்ந்தது. எந்நேரமும் வாகனப் போக்குவரத்து நெருக்கடி மிகுதியான அந்த நடுத்தெருவிலே ஓர் கல் இடுக்கில் எந்தச் சமயமும் நசிந்து தீய்ந்துபோகும் ஆபத்துடனே முளைத்து வளர்ந்து காற்றிலே சிலுசிலிர்த்து நிற்கும் அவ்விரு பசும்புல்துளிரையும் நான் அதிசயமாகப் பார்த்து அதில் மனம் லயித்துப் போன வேளை என் பின்னால் கையில் மறைத்துவைத்திருந்த வெற்றிலைச் சுருளை யாரோ பிடுங்குவதுபோல் தோன்றியதால் வெடுக்கெனத் திரும்பினேன். ஒரு கட்டாக்காலித் தெருமாடு. அதுதான் நான் வேறு கவனமாக நின்றசமயம் என்கையிலிருந்து வெற்றிலைச் சுருளைப் பறித்துவாய்க்குள் சுருட்டிக் கொண்டு அப்பால் நகர்ந்து தன் வழியே போய்க்கொண்டிருந்தது. எதிர்பாராதபடி



இவ்வாறு மாடு வந்து முட்டியதனால் நான் திகைப்படைந்து துள்ளிக்குதித்ததையும் வெற்றிலைச் சுருளைப் பறிகொடுத்துவிட்டு மாட்டைத் துரத்திக் கலைத்ததையும் கவனித்த டாக்டர் அம்மா மனம் குலுங்க சிரித்தார்.

"என்ன சின்னத்துரை வெற்றிலைச் சுருள் போய்விட்டதா! அதுதான் நல்லது. நீர் ஆஸ்பத்திரிப் படுக்கையில்கூட வெற்றிலை பாக்கைவிட முடியாமலிருந்தனீரல்லோ. காலை தொடக்கமாய் காத்து நின்ற பசு இப்பதான் உம்மிடம் வந்து சேர்ந்தது" காரின் இயந்திரப் பகுதியை இழுத்து மூடிவிட்டு ஒரு சிறு குழந்தையின் குதூகலத்துடனே காரில் ஏறி அமர்ந்தார் டாக்டர் அம்மா.

கார் அங்கிருந்து விர்ரெனக் கிளம்பிச் சென்றது. வழியிலே ஓரிடத்தில் ஒரு கடையின் முன்னால் தோடம் பழம் குவித்துவைத்திருந்ததைப் பார்த்தபோது காரை உடனே நிறுத்தி கடைக்காரரிடம் தாமே விலை பேசி ஒரு

"நீங்கள் யாழ்ப்பாணத்தில் எதுவரைக்கும் போகிறீர்கள் அம்மா?" நான் கேட்டேன்.

"நீர் கவலைப்படாமலிரும் சின்னத்துரை. உம்மை உமது வீட்டு வாசலில் கொண்டுபோய்விடுகிறேன்."

"அதற்கில்லையம்மா. நீங்கள் எந்த ஊர் என்று தெரிந்துகொள்வதற்காகக் கேட்டேன்.

"என் ஊருக்கு கொடிகாமத்திலிருந்து பன்னிரண்டு மைல் அதற்கப்பாலும் போகவேண்டும். நீர் கிழக்கு மாகாணத்திலிருந்து கிழக்கு நாட்டுக்கு வருகிறீர். நான் கிழக்கிலிருந்து மேற்கே போகவேணும்."

கொடிகாமத்திலிருந்து பன்னிரண்டு மைலுக்கப்பால் எத்தனையோ ஊர்! கிழக்கிலிருந்து மேற்கே போகும் பாதையில் மேற்குக் கடல்வரை ஏன், அதற்கப்பால் கடலுக்குள்ளே விழுந்து சுழியோடினால் ஆசியாக் கண்டத்தைத் தாண்டி நேரே ஐரோப்பாவுக்கே இந்தக் காருடனே போய்ச் சேரலாமே! டாக்டர் அம்மா என்ன புதிர் போடுகிறாரோ! யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்துவிட்டால் அதன்பின் அங்கு எல்லா ஊருமே நமது அயலூர்கள் தாமே. சும்மா எல்லோருமே யாழ்ப்பாணத்தவர்தாமே. கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே மறைவதற்குள்ளாக சுற்றி வந்துவிடலாம்."

'யாழ்ப்பாணத்தை கொண்டுபோகிற எங்கள் கைப்பெட்டிக்குள்ளே அடக்கிவிடுகிற அப்படி நினைப்பெல்லாம் ஆனையிறவுக்கு வெளியே இருக்கிறவரையில்தானே நீடிக்கிறது. சொந்த ஊர் திரும்பிய போது அவரவர் வீடும் வீட்டுப் படலையுமாகிவிடுகிறது.

இதற்குமேல் டாக்டர் அம்மா ஒன்றும் பேசாமலே காரைச் செலுத்துவதில் ஆழ்ந்த கவனம் செலுத்தினார். நானும் மௌனமானேன். கார் நிதானவேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது.

கொடிகாமத்துக்கு வந்தாச்சு. சின்னத்துரை — டாக்டர் அம்மாவின் குரல் கேட்டு என் இறு தூக்கத்திலிருந்து விழிப்பெய்தினேன். நான் வெளியே எட்டிப் பார்த்துவிட்டு இன்னும் இரண்டுமைல் போனால் குறுக்கே ஒரு தெரு பிரிகிறது. அங்கு திரும்பி ஓர் அரை மைல் சமீபம்தான் [illegible], அம்மா"

நொடிப்பொழுதில் அந்த சந்திக்கு கார் போய்விட்

## சைபீரிய நாடோடிக் கதை

# பொன்னெளிர் அம்புலி

— அ. செ. மு. —

எப்படி எழுதத் தொடங்கினேன் என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதி உதவுமாறு கொழும்பிலிருந்து வெளிவரும் ஒரு வாரப்பத்திரிகை சில காலத்துக்குமுன் கேட்டிருந்தது. அப்பொழுது உடல் நலமின்மை காரணமாகஎனக்கு அந்தப்பழைய காலத்தை நினைவுபடுத்திப் பார்க்கவும் ஏதும் எழுதவும் முடியாமல் போய்விட்டது. அதனால் அது விஷயத்தை மெல்லப் பின்போட்டுக் கொழும்புப் பத்திரிகை நண்பருக்கும் என்னவோ கூறிச்சமாளித்துத் தப்பிக்கொண்டேன்.

யாழ்ப்பாணத்து மாத சஞ்சிகை நண்பர் மகா பொல்லாதவர். என் மேசைக்கருகே வந்து உட்கார்ந்துகொண்டார். ஏதாவது எழுதிக்கொடுத்தால் தான் 'இங்கிருந்து நகருவேன்' என்று சத்தியாக்கிரகம் செய்வதற்கே துணிந்தவராகிவிட்டார். வேறுவழியில்லை. தப்பி ஓட மார்க்கமில்லை. நாற்புறமும் சுவர். நாம் இருப்பதோ ஐம்பது அடி உயரமான மாடி. தொப்பென்று குதித்து பாய்ந்தோடி மறைந்துவிடலாமென்றாலோ-இந்த நவமான மாடிக்கட்டிடத்துக்கு அடியில் உள்ள புஷ்பத்தோட்டங்களில் பூத்துக்குலுங்கி நிற்கும் அழகான பூங்கொடிகள் நசிந்து நாசமாகிப்போகுமே - மலர்களிலே தேனுண்ண ஓடிவரும் மதுகரங்கள் முகம் வாடித்திரும்பிப்போய்விடுமே என்றுதான் சிறிதே தயக்கமாயிற்று.

நண்பரைப் பக்கத்தில் உட்காரவைத்துவிட்டு அவரிடம் ஒரு வாய்க்கு வெற்றிலை பாக்கு வாங்கிப் போட்டுச் சுவைத்துக் கொண்டு அதுவே எரிபொருளாக, பழைய நாட்களைப் பின்னோக்கி ஒரு சில நிமிடம் யாத்திரை செய்தேன். எப்பொழுதாவது ஒருகானமோ கீதமோ காற்றிலே மிதந்து வராதபோது நாம் பின்னோக்கியோ அல்லது முன்னோக்கியோ சஞ்சாரம்செய்வதற்குகந்த எரிபொருள் நமக்கெல்லாம் வேறுஎங்கே

அல்லது, வீட்டுத்திண்ணையிலே என் பாட்டியம்மா மணலைப்பரப்பி அதன் மேலே என் கைவிரலைப் பிடித்து வைத்து சற்றேனும் தயவு தாட்சண்யம் காட்டாமல் கை எரிய கால்விறைக்க இரண்டு மணி நேரம் தினமும் காலை வேளையிலே மணலை உழுதாளே அந்தக் காலம் முதலே எழுத்து என் கைக்கு ஒரு வினை ஆகிவிட்டதோ?

அதுவுமில்லையானால்,

பள்ளிக்கூட டெஸ்கின் முன் வில்லாக வளைந்து நின்று அப்பியாசக் கொப்பியில் மூன்று வரிக்கு ஒற்றைக்கொம்பைஉயர்த்தி இரண்டு வரிக்கு 'யு'வின் காலை கீழே இழுத்து பனங்கொட்டை பனங்கொட்டையாக எழுதப்பயின்றேனே- அதுதான் நான் எழுத்துப் பயிலத் தொடங்கியகாலமாயிருக்குமோ?

ஒன்றும் சரியாக ஞாபகத்துக்கு வரமாட்டேன் என்கிறது. மெய்தான், எனக்கு உடல்நிலை இன்னும் முற்றாகச் சீர்படவில்லைப்போல் தானிருக்கிறது.

எப்படியானாலும், நான் எழுத்தாளனாகவே பிறந்துவிடவில்லையென்றாலும், நான்கு புரட்டாசி நவராத்திரி வீண்போய்விட்டதென்றாலும், மிகச் சிறுவயதில் கதை எழுதத்துணிந்ததுஎன்னவோ மெய். ஆனால் அந்தக் கதை எங்கேயும் வெளிவந்ததே இல்லை. அதன்புகழ் வீட்டு வாசலைத் தாண்டி அடுத்த வீடுவரைகூட எட்டியதில்லை. இவ் அபூர்வ கன்னிப் படைப்பு- எழுத்தோவியம், என் சுட்டுவிரலினால் அல்ல எழுதுகோல் எனப்பட்ட பென்சில் தூரிகையினால்தான் உருவாயிற்று.

அப்பொழுதுஎனக்குஎட்டு வயதிருக்கும். மாவிட்டபுரம்-கீரிமலை தீர்த்த யாத்திரைப் பாதையில் கண்ணுக்கெட்டாமல் நீண்டு பரந்து கிடக்கும் அந்த காட்டு வெளிக்குடியிருப்பு. வீட்டில் பாட்டியும் என் தாயாரும் மகாபாரதவசனம் முதலாக கருங்குயில்குன்றத்துக் கொலைவரை எத்தனையோ புத்தகங்கள் வாசிப்பார்கள். மழைக் காலம் வந்துவிட்டால் இரவிலே மண்ணெண்ணைப் போத்தல் விளக்கு வெளிச்சத்தில் மகாபாரத வசனம் நடைபெறும். சில காலம் எங்களோடு கூடவிருந்த ஓர் அண்ணர், உதவியாக, சில வேளைகளில் கதை படிக்க முன்வருவார். குருச்சேத்திரப் போர்க்களத்தில் அர்ச்சுனன் காண்டீபத்திலிருந்துகிளம்பும் நாகாஸ்திரம் பற்றிய வருணனை புத்தகத்தில் எட்டுவரிக்கு இருந்தால் அவர்ராகமிழுத்துநடுநடுவே ஆலாபனை செய்து அதை வாசித்து முடிக்க பத்துநிமிஷம் பிடிக்கும். கொடிய நாகாஸ்திரம் மலர்பஞ்சணையாகி என்னைத் தாலாட்ட நான் நித்திரையில் ஆழ்ந்துவிடுவேன்.

[தொடரும்]

# -: அருக்கோதயம் :-

— ச. திருப்பதி —

மஞ்சணறு மலரென்னும் மாது தன்னை
வண்டென்னும் சிறுகொழுநர் வதுவை செய்ய
நெருஞ்சங்க வர்நீல மலராம் மாது
நினைவழிந்தே உவகையற் றுவாடி நிற்பக்
கஞ்சமெனும் வனப்புமிகு மங்கை நல்லாள்
களிப்புற்றே விழிமலர்ந்து நோக்கும் வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்குட்டியாகவிருக்குமோ? என்னவோ அதைத்துரத்திக் கொண்டு பின்தொடர்வதைப் போலத்தான் ஓடுகிறது. இரண்டும் மின்னல் பளிச்சிட்டு மறைவதுபோல நொடிப்பொழுதில் என்

டாக்டர் அம்மாவா?

காரின் பின்கதவு திறக்கப்பட்டது. மறுபேச்சின்றி உள்ளே ஏறி அமர்ந்தேன். காரின் கதவை அடித்துச் சாத்திவிட்டு திருப்புவளையத்தில் கை வைத்து

அம்மா.''

''மலையிலே வேலை பார்க்கிறீரோ! ஏன் காய்ச்சலோடு வெளிக்கிட்டீர்?'' - ஆஸ்பத்திரியில் நோயாளர் படுக்கையில் கேட்கத்தவறிய எல்லாவற்றையும் கேட்டறிய முற்பட்டவர் போல டாக்டர் அம்மா அடுக்கடுக்காக இவ்வாறு கேட்கலானார்.

''நான் அம்பாறையிலே வேலைபார்க்கிறேன் அம்மா. அங்கிருந்து மட்டக்களப்பு பஸ் ஏறி மலைக்கு ஒரு ஆளைச் சந்திக்கிறதுக்காக வந்தன். பயணம் வெளிக்கிட்ட போதே கொஞ்சம் சுகவீனமாக இருந்தது. இரண்டு கிழமை ஒய்வு விடுமுறை பெற்றுக்கொண்டேன்.''

''உமக்கு வந்த காய்ச்சல் ஆளை வலுவாகத் தாக்கிவிடக்கூடியது, சின்னத்துரை. வீட்டிலே போய் முழு ஓய்வு எடுத்துக்கொண்டு நல்ல சாப்பாடு சாப்பிடும். தோடம்பழம் நிறைய சாப்பிடவேணும். இங்கெல்லாம்தான் நல்ல மலிவாக வாங்கலாமே-யாழ்ப்பாணத்திலே எந்தப் பக்கம் ஊர்?''

''நான் கொடிகாமம் அம்மா.''

''என்ன சின்னத்துரை இன்னமும் ஆஸ்பத்திரியிலிருக்கிறதாகத்தான் நினைப்போ? அம்மா கிம்மா என்பதெல்லாம் ஆஸ்பத்திரிக்குள்ளே நீர் நோயாளியாக இருக்கும்வரையில்தான். மறந்துட்டீரா?''

காரை ஒரு கடைத் தெருவில் ஓரமாக மெல்ல நிற்பாட்டிவிட்டுத் திரும்பிப் பார்த்து இவ்வாறு என்னிடம் கூறிச் சிரித்த டாக்டர் அம்மா ''சரி சரி தேநீர் குடிக்கிறதானுல் போய் குடித்துவிட்டுவாரும். பரந்தனுக்கு வந்தாச்சு. இரண்டாம் முறை தேத்தண்ணீர் குடிக்க வீட்டுக்குப்போய் விடலாம்'' என்ருர்.

''உங்களுக்கு என்ன வேணும் அம்மா?''

''பார்த்தியோ நான் சொன்னதை அதற்குள் மறந்துபோனீரே. சரி சரி உம்முடைய விருப்பம்போல் செய்யும்.''

நான் கடைக்குச் சென்று முதலில் ஒரு சோடா வாங்கி கடைக்காரரிடம் ஒரு தம்ளரும் கேட்டு வாங்கிக் கொண்டுவந்து டாக்டர் அம்மாவுக்கு இரண்டு தடவை ஊற்றிக் கொடுத்தேன். அதன்பின் நான் கடையில் ஒரு கப் தேநீர்மட்டும் குடித்துவிட்டு கையில் வெற்றிலைச் சுருளுடன் காருக்குத் திரும்பினேன். டாக்டர் அம்மா காரின் இயந்திரப் பகுதியைத் திறந்து எதுவோ பழுது பார்த்துக்கொண்டு

...ஒரு சிறு குழந்தையின் குதூகலத்துடனே காரில் ஏறி அமர்ந்தார் டாக்டர் அம்மா.

கார் அங்கிருந்து விர்ரெனக் கிளம்பிச் சென்றது. வழியிலே ஓரிடத்தில் ஒரு கடையின் முன்னுல் தோடம்பழம் குவித்துவைத்திருந்ததைப் பார்த்தபோது காரை உடனே நிறுத்தி கடைக்காரரிடம் தாமே விலை பேசி ஒரு சாக்கு நிறைய வாங்கிக் கட்டி பின் ஆசனத்தில் என்னருகே போட்டுவிட்டு ''இறங்கிப் போகும்பொழுது இதை மறந்துடாதேயும் சின்னத்துரை'' என்ருர்.

ஆனையிறவுப் பாலத்தின் மேல் சிலு சிலுவென வந்து மோதிய கடல் காற்றை உந்தித்தள்ளிக்கொண்டே மோட்டார் ஓடிக்கொண்டிருந்தது. நெற்றியில் விழுந்து புரண்ட கூந்தலை அடிக்கடி கைகளால் ஒதுக்கிவிட்டுக் கொண்டே ஸ்டியரிங் வளையத்திலும் நிதானம் தப்பாதிருக்கவேண்டிய ஒரு சிறு சங்கடம் கொஞ்ச தூரத்துக்குத்தான். மாலைச்சூரியனின் பொற்கதிர்கள் அப்பொழுது அவர் முகத்தில் பட்டு அவரது சிவந்த கன்னங்களை ரோஜாப்பூவின் அழகிய

சிறுகதை

மென்னிதழ்களாக்கி ஜாலவித்தை செய்தன.

டாக்டர் அம்மாவின் குரல் கேட்டு என் இறு தூக்கத்திலிருந்து விழிப்பெய்தினேன். நான் வெளியே எட்டிப்பார்த்துவிட்டு இன்னும் இரண்டுமைல் போனுல் குறுக்கே ஒரு தெரு பிரிகிறது. அங்கு திரும்பி ஓர் அரை மைல் சமீபம்தான் என் வீடு, அம்மா''

நொடிப்பொழுதில் அந்த சந்திக்கு கார் போய்விட்டது.

''இவடம் தான் இடம்'' என்றேன்.

கார் நிற்கவில்லை. சந்தியில் திரும்பி என்வீடு வரை சென்று நேரே என் வீட்டு வாசலில் நின்றது.

''இதுதானே வீடு சின்னத்துரை?''

''ஓம் அம்மா''

''நான் அப்பொழுதே கேட்க மறந்துபோனேன். வீட்டிலே யார் யாரெல்லாம் இருக்கிறீர்கள்?''

''என் தாய், மனைவி, பிள்ளைகள் — வாருங்களேன் அம்மா. உடனே திரும்பி விடலாம்.''

தோடம்பழச் சாக்கு மூடையைத் தானே ஒரு கையில் தூக்கிக்கொண்டு டாக்டர் அம்மா என்கூட என் வீட்டுக்குள் நுழைந்தார். விட்டின் முன்கூடத்தில் விளக்கேற்றி வைத்திருந்தது. பிள்ளைகள் விளக்கைச் சூழவிருந்து படித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு வெட்டுக்கிளி எங்கிருந்தோர் பறந்து வந்து லாந்தர் கண்ணுடிமேல் உட்கார்ந்திருந்து படிக்கிற பிள்ளைகளுக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தது.

''எடியே கமலா அம்மாவும் ஆச்சியும் எங்கேயடி, ஓடிப்போய்க் கூட்டிக் கொண்டுவா'' ''பள்ளிக்கூடம் நடந்துகொண்டிருக்கிறதே. இங்கெல்லாம் நல்ல மழைபெய்திருக்குப்போல'' என்ருர் டாக்டர் அம்மா.

என் குரல் கேட்டமாத்திரத்தே பள்ளிக்கூடம் கலைந்தது. 'அப்பா வந்திட்டார்' என்று போட்டி போட்டுக் கூக்குரலிட்டபடி குழந்தைகள் எழுந்து சமயல் கட்டுக்கு சேதி சொல்ல ஓடினுர்கள். வீட்டிலிருந்த பழைய நாற்காலி ஒன்றை தூக்கிப் போட்டு டாக்டர் அம்மாவை அதில் உட்காரச் சொன்னேன்.

சமையல் கட்டிலிருந்து என் அம்மாவும் மனைவியும் வெளியே வந்தார்கள்.

அதன் பின் ஓர் அரை மணி நேரம் மட்டில் வீட்டில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்தான்.

என் மனைவியும் டாக்டர் அம்மாவும் ஒருபோது பள்ளித் தோழிகளாயிருந்தார்

களாம். அது விஷயமும் அப்பொழுது தெரிந்துவிடவே வீட்டில் அதன்மேல் ஒரே மகிழ்ச்சிக் குதூகலம்.

டாக்டர் அம்மா எங்களிடமிருந்து விடைபெற்றுச் சென்றபோது ''சின்னத்துரை அண்ணே, வருகிறேன்'' என்று கைகுவித்து வணக்கம் செலுத்திக் கொண்டு மோட்டாரில் போய் ஏறினுர்.

[யாவும் கற்பனை]

நிலை பாக்கு வாங்கிப் போட்டுச் சுவைத்துக் கொண்டு அதுவே எரிபொருளாக, பழைய நாட்களைப் பின்னுேக்கி ஒரு சில நிமிடம் யாத்திரை செய்தேன். எப்பொழுதாவது ஒருகானமோ கீதமோ காற்றிலே மிதந்து வராதபோது நாம் பின்னுேக்கியோ அல்லது முன்னுேக்கியோ சஞ்சாரம்செய்வதற்குகந்த எரிபொருள் நமக்கெல்லாம் வேறுஎங்கே கிடைக்கிறது?

எப்பொழுது எழுதத்தொடங்கினேன்? எப்பொழுது? அது எப்பொழுதாயிருக்கும்? எப்படி எழுதத்தொடங்கினேன்? கொழும்புப் பத்திரிகை நண்பர் முன்பு கொடுத்த அதே தலைப்பிலேயே எழுதப்போகிறேன். ஆகா, 'கம்' மென்று எங்கிருந்தோ மல்லிகையின் வாசனை வீசுகிறது....

நான் பிறந்த ஐந்தாவது புரட்டாசி நவராத்திரியில் 1926 ஒக்டோபர் விஜயதசமியின்போது தோரணங்களும் மலர்ச்சரமும் கட்டித் தொங்க குத்துவிளக்கேற்றி வைத்துக் கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைத்து தெய்வ சந்நிதானமாகப் பொலிந்த சுவாமி அறையிலே ஒரு பெரியவர் என் சுட்டு விரலைப்பற்றி ஏட்டில் வைத்து அழுத்தி அஆ ஆவன்ன என்று மிரட்டி உறுக்கி முதன் முதலாக எழுத்து அறிவித்தாரே, அன்று அப்பொழுதே என் விரலிலே மைபொசிந்து எனக்கு எழுத்து வந்துவிட்டதா, நான் எழுத்தாளன் ஆகிவிட்டேனு?

எவளோ ஓர் ஒளவைப் பாட்டி எங்கிருந்தோ தினமும் எங்கள் வீட்டுக்குவந்து ஓர் உலக்கையைத் தூக்கித் தன் பக்கத்திலே வைத்துக் கொண்டு வீட்டு முற்றத்தில் அகர முதலாம் 217 எழுத்துகளையும் ஒன்று விடாமல் மாத சம்பளத்துக்குக் கற்றுக் கொடுத்தாளே, அப்பொழுதே அந்தப் பொல்லாத உலக்கை சாட்சியாக எழுதிச் செல்லும் விதியின் கையானது இப்படியாக நான் தொடர்ந்து எழுதிக் கொண்டேயிருக்கவேண்டும் எனப் பணித்துவிட்டதோ?

ஆறு தன் இஷ்டம் போல் ஓடுகிறது; ஆனுல் அதன் வெள்ளம் இரு கரைகளுள் அடங்கியிருக்கிறது அந்தக் கரைகள் இல்லையேல் அதன் சுதந்திரப் போக்கு பாழாய்விடும் நம்போக்கும் தடையற்றதாய், மகிழ்ச்சி பொருந்தியதாய் இருக்கவேண்டுமென்ருல் நாம் நம் காரியங்களை முறைப்படுத்தி, ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும். நமது அன்ருட வேலைகள் ஏதேனுமொரு அடிப்படையைக் கொண்டதாய் அமைய வேண்டும்.

—கீதைப் பேருரைகளில் விஞேபா.

## ஸைபீரிய நாடோடிக் கதை

# ஓவியனும் கடைசல்காரனும்

முன்னெரு காலத்தில் மன்னன் கான் காராதியின் அவையில் ஒரு ஓவியனும் ஒரு மரக் கடைசல்காரனும் இருந்தனர். மன்னன் கான் எப்போதும் கடைசல்காரனைப் புகழ்ந்து கொண்டேயிருந்தான். அதேசமயத்தில் ஓவியக்கலைஞனை ஏதாவது குற்றம் சொல்லிக்கொண்டிருந்தான். இதனுல் மிகவும் பொருமையடைந்த ஓவியக் கலைஞன், தனது போட்டியாளனை எவ்வாறு ஒழித்துக் கட்டலாம் எனச் சிந்திக்கலானுன்.

ஒருநாள் அவன், கானுக்கு அவரது இறந்து போன தந்தை எழுதியதைப் போன்று ஒரு கடிதம் எழுதினுன். கடிதத்தின் வாசகம் பின்வருமாறு இருந்தது. ''அன்புள்ள மகனே, நான் இங்கே சொர்க்கத்தில் ஒரு கடவுள் ஆகிவிட்டேன். கோவில் ஒன்று கட்டிக் கொண்டிருக்கிறேன். அதை அழகுபடுத்த, நீ உன் கடைசல்காரனை, புகைமூட்டத்தின் ஊடே வைத்து மேலே அனுப்பு.''

கானுக்குத் தனது புகழ்மிக்க கைத்தொழில் விற்பன்னனைப் பிரிய மனமில்லைதான். இருப்பினும் அவனை அழைத்துப் பிரயாணத்திற்குத் தயாராகும்படி பணித்தார். மரக் கடைசல்காரன் கடிதம் எழுதியது யாராக இருக்கும் என ஊகித்தான். ஆகவே அவன் கானிடம் ''பிரபு, எனக்காகக் கட்டப்போகும் 'சிதை' எங்கே இருக்கிறது எனச்சொல்லுங்கள். மேலும் நான் எனது கருவிகளை எல்லாம் தயார் செய்துகொண்டு புறப்படுவதற்குப் பத்து நாட்கள் அவகாசமும் அருள வேண்டும்'' என்று மிகப்பணிவுடன்கேட்டான்.

கானும் சம்மதித்தார். கடைசல்காரன் தன் கூடாரத்திலிருந்து, தன்னை உயிரோடு வைத்து எரிக்கப் போகும் இடம் வரை ஒரு பாதாளச் சுரங்கப் பாதை அமைப்பதில் தீவிரமாக முனைந்தான். பத்தாவது நாளன்று தான் 'மேலே' போவதற்குச் சித்தமாக யிருப்பதாக அறிவித்தான்.

கான் தனது வேலையாட்களைக் கட்டைகளையும், வைக்கோலையும் கொண்டு சிதைக்கு ஏற்பாடு செய்யக் கட்டளையிட்டான். ஓவியக் கலைஞன் ஓடியாடி மிகக் கடுமையாக உழைத்தான். நெருப்பு ஏற்றப்பட்ட பின்னர் புகை கிளம்பி, பிறர் பார்வையிலிருந்து தன்னை மறைத்ததும், கடைசல்காரன் தான் தோண்டியிருந்த சுரங்கப்பாதை வழியாக மறைந்து விட்டான்.

இதன் பின்னர் ஒருவாரம் கழித்து, கடைசல்காரன் கையில் ஒரு கடிதத்துடன் கானின் எதிரே மீண்டும் தோன்றினுன்!

''உங்களது மதிப்புக்குரிய தந்தையிடமிருந்து செய்தி கொண்டு வந்திருக்கிறேன்'' என்ருன் அவன்.

கான் கடிதத்தைப் படித்தார். ''என் மகனே உனது மரக்கடைசல்காரன் அருஞ்செயல் புரிந்துள்ளான். தகுந்தவிதமாக அவனுக்குப் பரிசுகொடு. என் கோயில் மிக அழகாகயிருக்கிறது. ஆனுல் அதற்கு இப்போது வண்ணம் தீட்டவேண்டியுள்ளது. ஆகவே உடனடியாக உனது ஓவியக்கலைஞனை இதே போன்று அனுப்பிவை.''

கான் ஓவியக் கலைஞனை அழைத்தார்- கலைஞன்பயத்தால் நடுங்கியவாறே, பிரயாணத்திற்கு ஆயத்தப்பட ஒன்பது நாட்கள் அவகாசம் கேட்டான்.

கான், ''இல்லை! என் தந்தை உடனடியாக என்று குறிப்பிட்டுள்ளார். அவரது கட்டளை புனிதமானது'' என்ருர்.

ஆகவே சிதை மூட்டினுர்கள். சிதைக்கு நெருப்புமூட்டியவுடன் ஓவியக் கலைஞன் அலறிக்கொண்டே, அந்தச் சிதையினின்னும் துள்ளிக் குதித்து ஓட ஆரம்பித்தான். அவனை மீண்டும் யாரும் பார்க்கவே இல்லை!

## -: அருணோதயம் :-

— ச. திருப்பதி —

மஞ்சனறு மலரென்னும் மாது தன்னை
வண்டென்னும் சிறுகொழுநர் வதுவை செய்ய
நெஞ்சங்க வர்நீல மலராம் மாது
நினைவழிந்தே உவகையற் றுவாடி நிற்பக்
கஞ்சமெனும் வனப்புமிகு மங்கை நல்லாள்
களிப்புற்றே விழிமலர்ந்து நோக்கும் வேளை
வஞ்சனையில் குமுதமெனும் மலராம் மங்கை
மாய்ந்திடவே வந்துதித்தான் இரவி வானம்

கள்ளமிலா உள்ளமுடைக் கானில் வாழும்
கணக்கில்லா விலங்கினங்கள் எழுந்து தோன்ற
உள்ளமெலாம் கபடென்னும் உதவாத் தன்மை
உள்ளசில உயிரினங்கள் ஒளித்து வாழத்
துள்ளுமிளம் பசுவினது தூய கன்று
துயர்நீங்கி அமுதுண்டு துடித்து நிற்ப
அள்ளுமெழில் அரிவையர்கள் அயர்வு நீங்கி
அருணனது வரவுகாண விரைந்தார் ஆங்கே.

புள்ளினங்கள் பொலிவுடனே கீதம் ஓதப்
பொங்குமெழில் பூவையர்கள் போற்றி ஏத்தக்
கள்ளிருக்கும் பலமலர்கள் அலர்ந்து தோன்றக்
களிமயில்கள் நடமாடி நலிந்து சோரக்
கொள்ளையின்பம் காணுமிள மங்கை நல்லார்
கொடுமைசெயத் தோன்றினனே இரவி என்னத்
தெள்ளமுதம் ஊட்டுழவர் எழுந்தார் ஏரைத்
தெரிவையர்தாம் எடுத்தளித்தார் விரைந்தே ஏகி.

உத்தமராம் தங்கணவர் உழவே சென்ருர்
உடலமெலாம் நொந்தழிந்து போவார் என்றே
சித்தமதில் சத்திமிகு தோகை மின்னுர்
செப்பரிய எழில்சான்ற உழவர் பெண்டிர்
நித்திரையின் சுகமறியா அரிவை யர்கள்
நெஞ்சுருகி அருள்சுரந்து கஞ்சி தூக்கி
எத்தனையோ காதவழி நடக்கின் ருரே
இத்தரையில் உத்தமிகள் அவர்தாம் அம்ம!


''லீடன்'' LEYDEN
தயாரிப்புக்கள்
○ பெனியன்
○ ஸ்போட் சேட்
○ ரி சேட்
○ ரெறி சேட்
○ ரெறி பிளவுஸ்
○ பேபி வெஸ்ட்
○ கால் மேஸ்
(Nylon & Cotton)
லீடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரூட், யாழ்ப்பாணம்.
போன்: 330


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உலகம்

## நரியை ஏய்த்த ஆமை

— "சிட்டு" —

ஒரு கடற்கரையில் ஒரு சிறிய ஆமை தினமும் வந்திருப்பது வழக்கம். கடலுக்கு வெளியே உள்ள காட்சிகளைக் கண்டு ரசிக்கவும், தரையில் வீசும் காற்றிலும் மாலை வெயிலிலும் குளிக்கவும் அது தினமும் மாலை நேரத்தில் அந்தக் கரையில் வந்து இருக்கும். பாவம், ஒருநாள் அந்தக் குட்டி ஆமை மிக்க சோதனைக்குள்ளாகிவிட்டது.

வழக்கம்போலவே ஒருநாள் அந்த ஆமை கடற்கரை மணலில் இருந்து காற்றுவாங்கிக்கொண்டிருந்தது. காற்றின் இதத்திலும் மாலை வெயிலின் சுகத்திலும் அது தன்னையே மறந்திருந்துவிட்டது. கொஞ்சம் விழிப்பாக இருந்திருந்தால் அதற்கு இப்படியொரு நிலை வந்திருக்காது.

கடற்கரையில் உல்லாசமாகப் பொழுது போக்கவென்று தம் பெற்றோருடன் வந்திருந்த சில குறும்புச் சிறுவர் கண்களில் இந்த ஆமை பட்டுவிட்டது. அதன் கஷ்டகாலம் என்றே சொல்லவேண்டும். அந்த ஆமையை அவர்கள் என்னவெல்லாமோ செய்துவிட்டு, கடைசியில் அதை மல்லாத்திவிட்டுச் சென்றுவிட்டனர். அது எவ்வளவோ முயன்றும் அதனால் மறுபுறம் புரண்டுகொள்ள முடியவில்லை.

வெகு நேரமாகிவிட்டது.

சூரியன் அந்திவானில் மறைந்துவிட்டான். கடற்கரையில் இப்போது யாருமில்லை. எல்லோரும் தத்தம் வீடு போய்விட்டார்கள். அந்த வேளையில் அந்தப் பக்கமாக ஒரு நரி வந்துகொண்டிருந்தது. அது கடற்கரையில் நண்டுகள் பிடித்துத் தின்பதற்காக அங்கு வந்தது. அது முன்னரும் அடிக்கடி அங்கு வந்து நண்டுகள் பிடித்துத் தின்றிருக்கிறது. எனினும் இந்த ஆமையை அது முன்னெப்பொழுதும் கண்டிருக்கவில்லை.

நரி, ஆமையைக்கண்டுவிட்டது. நான்கு சிறிய கால்களையும் ஆமை உதறித் துடித்துக்கொண்டிருந்தது. அதனைப் பிடித்துத் தின்னவேண்டுமென்று நரி எண்ணியது. உடனே ஆமைமீது பாய்ந்து கடித்தது. ஆனால் ஏமாந்துவிட்டது. அத்துடன் அதற்கு ஆச்சரியமும் ஏற்பட்டது. முன்னர் வெளியே தெரிந்த ஆமையின் தலையும் கால்களும் இப்போது எங்கே என நரி வியந்தது.

எப்படியெல்லாமோ ஆமையைக் கொன்று தின்ன நரி பாடுபட்டது. ஆனால் முடியவில்லை. நரி யோசித்தது. ஆமையும் தான் எப்படித் தப்பிக்கொள்ளலாமெனச் சிந்தித்தது. ஆமை சொன்னது: "நண்பரே, உமது பசியைத்தீர்ப்பதில் எனக்கு மிகுந்த விருப்பமே. ஆனால் என்னைக் கொல்ல உம்மால்முடியவில்லையே. ஒன்றுமட்டும் உம்மைக் கெஞ்சிக் கேட்கின்றேன். என்னைக் கொல்ல முடியவில்லையே என்ற கோபத்தினால் என்னைத்தூக்கிக் கடலில் போட்டுவிடாதேயும். அப்படி என்னைக் கடலில் போட்டால் நீரில் மூச்சுத்திணறி நான் வீணாகச் செத்துவிடவேண்டியேற்படும். தயவுசெய்து என்னைக் கடலில்மட்டும் போட்டுவிடவேண்டாம்."

நரியின் மூளை இப்போது நன்றாக வேலைசெய்ய ஆரம்பித்தது. இந்த ஜந்துவை எப்படியும் தின்றுதான் ஆகவேண்டும் என எண்ணியது. அதற்குப் பசி அதிகரித்தது. நண்டுகளும் கிடைக்கவில்லை. தன்னால் கொல்ல முடியாததால், அதனை எப்படியும் கடலில் தள்ளிக்கொல்லவேண்டுமென்றும், அது செத்தபின்னர், எப்படித் தின்னலாமென்று யோசிக்கலாமென்றும் நினைத்து, தன் கால்களாலும் முகத்தாலும் அந்த ஆமையை உருட்டி உருட்டிக்கொண்டுபோய்க் கடலில் தள்ளியது. பாவம் நரி, ஆமையிடம் ஏமாந்தது. கடலில் விழுந்த ஆமை மிக விரைவாகநீந்தி ஆழ்கடலின் மேல் வந்து தன் தலையை உயர்த்திக் கரையைப்பார்த்தது. கோபமிகுதியினாற் போலும், நரி தன் வாலை ஆட்டியவாறு கரை நீளம் போய்க்கொண்டிருந்தது.

## தமிழ் மொழி

உலகின் மொழிகளில்
இனியமொழி
உண்மை இலக்கணம்
உள்ளமொழி
பல பல அறிஞர்
பயின்றமொழி
பண்ணும் கூத்தும்
நிறைந்த மொழி.
எண்ணும் எழுத்தும்
தந்தமொழி
எல்லாளன் வளர்த்த
இனியமொழி
வண்ணக் கலைகள்
வளர்ந்தமொழி
வள்ளுவர் குறளை
வடித்தமொழி
இருநூற்று நாற்பத்
தேழெழுத்தும்
இயன்று பயிலும்
இளைய மொழி
அருமைத் தமிழ்மொழி
எங்கள் மொழி
அகிலம் பரப்ப
முயல்வோமே!

— க. செல்வதுரை

## வானொலி

எங்கள் வீட்டு வானொலி
இசைக்கும் நல்ல தேனொலி
எங்கோ இருந்து இசைகளை
இழுத் தியம்பும் வானொலி.
பக்திப் பாட்டுப் பாடிடும்
பாங்காய்ச் செய்தி கூறிடும்
நித்திப் பையே தந்திடும்
தினமும்வேளை ஒலித்திடும்.
சினிமாப் பாட்டுப் பாடிடும்
சிறந்த நாடகம் நடித்திடும்
இனிய வில்லு இசையினை
இழுத்துஎங்கும் பரப்பிடும்.
பொருள் பொதிந்த
பேச்சுக்கள்
பொங்குதமிழில் முழங்கிடும்
தெருள்அடைந்தமனிதர்க்கு
தூய அறிவு வழங்கிடும்.

—வே. இராசலிங்கம்

# தந்தையைப்போல்•தனயன்

நங்கையரை பஸ் கொண்டக்டராக நியமிக்கலாமா?

# நங்கையரை சாரதிகளாகவும் நியமிக்க வேண்டும்

[நங்கையரைக் கொண்டக்டராக நியமிக்கலாம், நியமிக்கக் கூடாது. இரு பக்கங்களுக்கும் ஏற்ப நல்ல கருத்துக்களையும் ஆலோசனைகளையும் குடும்பச்சுடர், வாசக நேயர்கள் மூலம் வாசகர்களுக்கு திரட்டித் தந்தது. **நங்கையரைக் கொண்டக்டராக நியமிக்கலாமா?** விவாதமேடையில்கலந்து தங்கள் கருத்துரைகளை வழங்கியும் ஆர்வமுடன் வாசித்தும் வந்த நேயர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.]

ஆண்களுக்கு வீரம் இயற்கையாக அமைவதுபோல பெண்களுக்கு கவனமும் நுண்ணுணர்வும் இயற்கையாகவே இனிதமைகின்றன வென்று மனோதத்துவ அறிஞர்கள் கருதுகிறார்கள். பஸ் கொண்டக்டர்களாக இருப்பவர்களும் மிக்க கவனமுடையவர்களாகவும் நுண்ணுணர்வு வாய்ந்தவர்களாகவும் இருத்தல்வேண்டும். ஆகவே நங்கையரே, நாட்டில் ஆண்களிலும் நல்ல கொண்டக்டர்கள்.

## குடும்பச் சுடர்

மேல் நாடுகளில் பெண்கள் சிறிய வேலைகளைச் செய்துகொண்டு ஆண்கள் செய்யவேண்டிய பெரிய வேலைகளை ஆண்களுக்கெனவே ஒதுக்கிவிட்டதால் அந்நாடுகள் செழித்தோங்கியுள்ளன. நம் நாட்டில் ஆண்கள் பஸ்கொண்டக்டர்கள் போன்ற சிறிய வேலைகளில் ஈடுபட்டு இருத்தலாலேதான் நம் நாட்டில் பசி தாண்டவமாடுகிறது.

பெண்கள் கொண்டக்டர்களானால் பெண்மை பிறழ்ந்துவிடுமென்று சிலர் பேதலிக்கிறார்கள். உலகின் பல்வேறு பகுதிகளிலும் இல்லாத "பயம்" நம் நாட்டுக்குமாத்திரம் ஒரு கேடாக இருக்கவேண்டுமா?

மகிழ்ச்சி அது எல்லா நோய்களுக்கும் பகைஎன்பதை உணர்ந்து மகிழ்ச்சியாக வாழமுற்பட்டால் வாழ்க்கையில் துன்பமேயிராது. ஆனால் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி? இந்தப் புதிரை அறிந்துகொள்ள அதிகப்பிரயாசை தேவையில்லை. உண்மையே பேசு; அன்பு ஒன்றே உன் தவமாக இருக்கட்டும். தன்னலமியாக என்றும் இராதே; நேர்மையும் எளிமையும் உன் வாழ்க்கைத்தேரின் சக்கரங்களாக இருக்கட்டும்; அமைதி உன் உள்ளத்தில் இயல்பாகவே ஏற்பட்டுவிடும்.

—ரஸ்கின்.

### செல்வன் தணீஸ்வரனின் கருத்து

அன்றைய கீழைத்தேய உலகிலே (இலங்கையுட்பட) பெண்கள் பகிரங்க வேலையில் ஈடுபடுவதை இழிவாக நினைத்துவந்தனர். ஆனால் இன்றோ எல்லாப் பெண்களும் ஒன்றிரண்டு தவிர்ந்த எல்லாவேலைகளிலும் ஆண்களுடன்சரிநிகர் சமானமாக பெண்கள் ஆண்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தவரல்லர் என்பதை நிரூபிக்கின்றனர். ஆகையால்பெண்கள் கொண்டக்டர் ஆனால் மாத்திரம் என்ன இழுக்கு இருக்கிறது?

கந்தோர்களிலிருந்து செய்யும் வேலைகள் அல்லாத வெளிப்புற வேலைகளான கொண்டக்டர், எஞ்சினியர் மற்றும்தொழில்நுட்பவேலைகள் போன்றன பெண்கள் செய்வது கடினம் என்றும் இதனால் பெண்களுக்கு கள்ளர், காடையர்களால் ஆபத்து என்றும் ஒருசாரார் கூறுவதுண்டு. இதுவும் உண்மையே. ஆனால் மற்றைய தொழில்களைசெய்யும் பெண்களுக்கு ஆபத்துஇல்லைஎன்று எப்படிக் கூறமுடியும்?

ஆகையால் பெண்களுக்கு அவர்கள் செய்யும் தொழில்களில் வரும் கஷ்ட நஷ்டங்களிலிருந்து பாதுகாக்க அரசாங்கமும் பொதுமக்களும் சட்டங்கள்மூலமாக ஆவன செய்ய வேண்டுமேயொழிய அதற்காக அவ்வத்தொழிலைப்பார்க்க அஞ்சுவதில் அர்த்தமில்லை. மனத்தைரியம் உள்ள எந்தப் பெண்ணும் கொண்டக்டர் ஆவதற்குத் தகுதியுடையவரே?

மேலும் கொண்டக்டராக வேலை பார்க்கும் பெண்கள் சென்ற சென்ற இடங்களில் தங்கவேண்டியேற்படும். பஸ் இடைவழியில் பழுதானால் பெண் கொண்டக்டர்களுக்குச் சிரமம் ஏற்படும். இவற்றைச் சமாளிக்க இவர்களுக்கு மேலதிகாரிகள் பிரத்தியேக சலுகைகள் அளிக்கலாம்.

பெண் கொண்டக்டர்கள் மாத்திரம் அல்ல பெண் பஸ் சாரதிகளையும் வருங்காலத்தில் காணக்கூடியதாக இருக்கவேண்டும் என்பது என் அவா.

### செல்வி இ நீற்று குணசிலியின் கருத்து

நாட்டையே ஆட்சிசெய்து நல்வழிப்படுத்தும் பெண்களால் ரிக்கெற் வழங்குதல், நீண்ட பயணம் செய்தல் முடியாத காரியங்களா? பெண்கள் பேதலிக்கும் தன்மை உடையவர்களாயின் ஆஸ்பத்திரிகளில் எப்படி டாக்டர்களாகவும்தாதிகளாகவும் பணியாற்றுகின்றனர். ஆண்கள் கொண்டக்டராகப்பணியாற்றும்போது பஸ்கள் பொலிஸ் ஸ்டேசன் செல்லுகையில் பெண்கள் பணியாற்றுகையில்செல்வது தப்பா?

பெண்கள் பஸ் கொண்டக்டராக மட்டுமல்லாது பஸ் சாரதிகளாகவும்பணியாற்ற வேண்டும். பாவையர்கள் பல்வேறு துறைகளில் பணியாற்றினால் அத்துறைகள் பாங்குடன் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

## விவாத மேடை

### பொ. ராஜாவின் கருத்து

பெண் நினைத்தால் எதையும் சாதிக்கும் மனோநிலை படைத்தவள். பெண் மென்மையான மலர்தான், ஆனால் அம்மலரைப் பாதுகாக்க கற்பெனும் முள் அவளுக்குக் காவலாக இருக்கும்போது பலரையும், பலவித மனோநிலை உள்ளவரையும் சந்திக்கும் கொண்டக்டர் தொழிலைப் புரியும்போது மனம் சஞ்சலம் அடையவோ அல்லது நேர்மைக்குப் புறம்பாக நடப்போர்க்கு தக்க பதிலடி கொடுக்கவோ தயங்கமாட்டாள் என்பதை நாம் பல துறைகளில் காண்பதுபோல் இத்துறையிலும் காணக்கூடியதாக இருக்கும்.

பெண் கருணையின் சின்னம். எனவே தற்போது கொடுமையாக நடந்துகொள்ளும் பஸ் கொண்டக்டர்களுக்கு முன்னோடியான முறையில் நடந்து காட்டுவாள் என்பதில் ஐயமில்லை. கொண்டக்டர்களில் தற்போதுள்ள குறைபாடுகள் ஒழிந்து சமூகத்தில் இவர்களுக்கு நல்ல பெயர் ஏற்பட இடமுண்டு.

உதாரணமாக இங்கிலாந்து தேசத்திலே பெண்கள் கொண்டக்டர் வேலை செய்வதால், பஸ் போக்குவரத்துக்கு எவ்வித அசௌகரியமோ பிரயாணிகளுக்கு துன்பமோ, குறைபாடோ ஏற்பட்டதென நாம் அறியவில்லை.

எனவே பெண்கள் பஸ் கொண்டக்டர்களாக நியமனம் பெறுவதால் சமூகம் மிக்க நன்மையடையும்.

### செல்வன் மனோகரின் கருத்து

இன்று பல்வேறு துறைகளிலும் முக்கிய பங்கெடுத்து நாட்டின் நலனிற்கு அயராதுழைக்கும் நம் நங்கையரை இ. போ. ச. மட்டும் புறக்கணிப்பதேன்?

"ஒரு நாடு செழித்து ஓங்குவதற்கு இரும்பு போன்ற தசைகளும் எஃகு போன்ற நரம்புகளும் பொருந்திய மக்கள் தேவை. எதனாலும் தடுத்து நிறுத்த முடியாத இளம் வாலிபர்கள் தேவை" இவ்வாறு சுவாமி விவேகானந்தர் ஒரு முறை கூறினார். ஆனால் நம் நாட்டில் இரும்பு போன்ற தசைகளும் எஃகு போன்ற நரம்புகளும் பொருந்திய ஆண்கள் "டிக்கட்டை" கிழித்துக் கொடுத்துப் பணத்தை வாங்கும் இச்சிறிய வேலைகளில் ஈடுபடுகிறார்கள்! ஆண்கள் தங்கள் திறமையைக் காட்டுவதற்கு வயலை உழுது விதைத்தல்போன்ற பல கிரமமான வேலைகள் உள்ளன.

### விட்டுக்குறிப்பு

## வெள்ளிப் பாத்திரங்கள்

இரும்புப் பெட்டியில் வைத்தால் வெள்ளி கறுத்துப்போய்விடும். உட்புறம் 'லைனிங்' செய்யப்பட்ட பீரோவிலோ அல்லது மரப்பெட்டியிலே வைக்கமுடிந்தால் நல்லதாகும். இல்லையேல் அதற்கென விற்கப்படும் திராவகமோ அல்லது வாஸ்லைனோ பூசி வைக்கலாம்.

பெரியவாய் அகலமான அலுமினியப் பாத்திரத்தில்வெந்நீரைக்கொதிக்க வைக்கவும். அரைப்படி நீருக்கு ஒரு தேக்கரண்டி சோடா உப்புச் சேர்க்கவும். அதில் சில வினாடிகள் கறையுள்ள வெள்ளிப் பாத்திரங்களைப் போட்டு எடுத்தால் கறைகளெல்லாம் போய்விடும்.

—குடித்தனப்பாங்கு.

சமூகத்திலிருந்து நான் அளவிலடங்காத சேவையை, உதவியைப் பெற்றிருக்கிறேன். இவ்வுலகில் வந்தபொழுது பலவீனனாய் பிறர் உதவியின்றி வாழ முடியாதவனாயிருந்தேன். இந்தச் சமூகம் சிறியவனாயிருந்த என்னைப் பெரியவனாக்கியிருக்கின்றது. ஆகையால் நான் சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டும். இதற்குச் சமூகத்தின் கடனைத் தீர்ப்பதற்காகச் செய்யப்படும் காரியம் என்பது பொருள்; பரோபகாரம் என்பது பொருளல்ல

○

சேவைமயமான வாழ்க்கையுடையவன் எல்லோருக்கும் சொந்தமாகிவிடுகிறான். ஒவ்வொரு பிள்ளைக்கும் தாய் தன்னிடமே அன்பு காட்டுவதாகத் தோன்றுகிறது: அவ்வாறே அம்மனிதன் ஒவ்வொருவனுக்கும் தன்னைச் சேர்ந்தவனாகிறான், அகிலஉலகிற்கும் பிரிய பாத்திரன், ஏற்கத் தகுந்தவன் ஆகிறான். அனைவருக்கும் அவன் தம் உயிருக்குயிரானவன். தம் நண்பன் தம் தோழன் ஆகிறான்.


—கீதைப் பேருரைகளில் வினோபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன் தந்தையைப் போலவே மகனும் ஒஸ்டர்மில்க் அருந்தி, ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வான்.

ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாருத பூரண பால் உணவு, பச்சிளங் குழக்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும் விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.




துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் அருந்தும் குழந்தைகள் பெலஞன சுக வளர்ச்சி பெறுகிறுர்கள்.


# ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ–அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபாற் பெட்டி 23, கொழும்பு.

179/66


# ‘எஸ்.எஸ்.ஆருக்கு ‘மாக்கெட்’ டல்லுங்க

## அவர் ஊழியரே சொன்ஞர்



“அரசியலா, படத் தயாரிப்பா, டைரக்ஷஞ, நடிப்பா? — எப்படி ஸார் ஒரேநேரத்திலே எல்லாத்தையும் கவனிக்கிறது! அப்பாடா, ‘டைம்’மே இல்லேயே!’ என்று சென்ற வருடம் யாழ்ப்பாணம் வந்திருந்த சமயம் மகிழ்ச்சியும் குளிர்ச்சியும் பொங்க சிரித்துச் சிரித்துச் சொன்ன இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ஆருக்கு இப்படி ஆகிவிட்டதா ‘மார்க்கட்’?

கோடம்பாக்கத்திலுள்ள எஸ். எஸ். ஆர். தோட்டத்துக்குப் போனபோது, எஸ். எஸ். ஆரைப்பற்றிக் கிடைத்த தகவல்கள் மனதையே உருக்கிவிட்டதே!

அழகாக அமைக்கப்பட்டிருந்த அந்த தோட்டத்துக்குள் நுழைந்த என்னை அன்புடன் வரவேற்ருர், அந்த மனிதர்! அவர்தான் எஸ். எஸ். ஆர். தோட்டத்தைக் கவனிக்கும் விசுவாசமான ஊழியர். எஸ். எஸ். ஆர். ஓய்வு நேரத்தில் வந்து தங்கும் வீடு அந்தப் பெரிய தோட்டத்தின் மத்தியில் நிமிர்ந்து நின்றது.

‘இலங்கையிலிருந்து வந்திருக்கிறேன்’ என்பதை அறிந்த அந்த ஊழியர், என்னேடு அரை மணி நேரம் மிக அன்பாகப் பேசினர். அவ்வாறு பேசும்பொழுது “என்ன

### சென்னை சென்று வந்த நமது நிருபர் எஸ். கே. ஆர். எழுதும் சுவையான தகவல்கள்


ஸார் நம்ம ஐயா ‘மார்க்கெட்’ இப்படி டல்லாகி விட்டதே” என்று அவர் கூறியது எனக்கு ரொம்ப ரொம்ப ஆச்சரியத்தைத் தந்தது. நானும் கதை கொடுத்து கதைவாங்க ஆரம்பித்தேன்.

அவருடைய, மணி மகுடம்’ பெயில்யர். இன்னும் அவர் எடுத்த படங்களெல்லாம் பெயில்யர். இப்ப அவருக்கு அவ்வளவு படங்களே இல்லீங்களே! முன்னரென்ருல் ஐயா வாரத்திலே ஒரு நாள்தானும் தோட்டத்துக்கு வரமாட்டார். இப்ப அடிக்கடி தோட்டத்துக்கு வருகிருரு. சில சமயங்களில் ஒரு நாள் முழுவதுமே தங்கியிருக்கிருரு. அவர் மனமும் ரொம்ப வெறுத்துப்போயிருக்கு என்ருர்.

எஸ். எஸ் ஆர். பற்றி அவர் இன்னும் பல தகவல்களைச் சொன்ஞர். அப்பாடி! எஸ். எஸ். ஆருக்கா இந்த நிலை வரவேண்டும்.

# மறு பிறவி பூஜை

தேவரின் மறுபிறவி படத்துக்காக வாஹினி ஸ்ருடியோவில் பூஜை போட்டபோது போயிருந்தேன். தேவர் படங்களில் உதவி டைரக்டராகப் பணியாற்றும் இலங்கையரானமாவிட்டபுரத்தைச் சேர்ந்த விஜயசிங்கம் அங்கு அழைத்துச் சென்ருர். சாண்டோ சின்னப்பா தேவரின் தம்பியாரான டைரக்டர் திருமுகம் இனிக்க இனிகப் பேசி வரவேற்று, ஸ்ருடியோவுக்குள்ளேயே இருக்கும் ‘கன்ரீனில்’ இட்லி, காப்பியெல்லாம் வாங்கித்தந்தார். ‘இலங்கையிலே தமிழரெல்லாம் எப்படியிருக்கிருங்க’ என்று திருமுகம் என்னைப் பார்த்துக் கேட்டபோது, அவருககு தமிழின் மீது எவ்வளவு பற்று இருக்கிறதென்பதை தெரிந்து கொண்டேன்.



பூஜைநடநதது. தேவர் முருகபக்தரல்லவா? மேல் முழுவதும் சந்தனம் பூசிக்கொண்டு அங்குமிங்குமாக ஓடியாடிக் கொண்டிருந்தார். ஜெயலலிதா, விஜயகுமாரி, மஞேரமா மூவரும் ஒருபக்கத்தில் ஒன்ருக அமர்ந்திருந்தனர். எம். ஜி. ஆர். அறையில் மேக்கப் போட்டுக் கொண்டிருந்தார். பூஜை முடிந்ததும் ‘லேம் ஜூஸ்’ கொடுத்தார்கள். தேவரின் படங்களைப் போல, தேவர் கொடுத்த ‘ஜூசும்’ இனிக்கச் செய்தது.


அன்று எம். ஜி. ஆர்.- ஜெயலலிதா பாட்டுப் பாடி ஆடும் காட்சியொன்றும் படம்பிடிக்கப்பட்டது. எம். ஜி. ஆர்தான் ‘ஜம்ஜம்’ என்று இருக்கிருரே!

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவி ‘இந்தஇடம் இது தான் நமது சொந்தஇடம்என்றுபாட முதலில்இருவர் (ஆணும், பெண்ணும்) ஆடிக்காட்டிஞர்கள். பின் எம். ஜி. ஆர்.- ஜெயலலிதா ஆடிஞர்கள். நடனடைரக்டர் டைரக்ட் செய்தார்.

உதட்டிற்கு பூச்சோ, கண்ணுக்கு மையோ, உள்ளத்தை விரசமடை

[5-ம் பக்கம் பார்க்க]

# கலை அரங்கம்



# ‘இலங்கை பத்திரிகைக்கு பேட்டி கொடுக்காதே’

## இப்படி விஜயகுமாரிக்கு எஸ். எஸ். ஆர். உத்தரவாம்

தேனும் பேட்டையிலுள்ள அந்தப்பெரிய சாலையில் அடுத்தடுத்து மூன்று பெரிய வீடுகள். அதில் மூன்ருவது வீட்டில் விஜயகுமாரி இருக்கிருர்.

விஜயகுமாரியின் வீட்டுக்குள் நுழைந்ததும், ஒரு வயதான அம்மா வந்தார். விஜயகுமாரி இன்று ஐந்து மணிக்கு வரச் சொன்ன விபரத்தைக் கூறினேன். உள்ளே போய்விட்டார். சிறிது நேரத்தில் ஒரு வாட்டசாட்டமான ஆசாமி வந்தார்.

“ஸார், அம்மா பேட்டி தரமுடியாதாம். எஸ். எஸ். ஆருடைய அனுமதியுடன்தான் அம்மா பேட்டி கொடுப்பாரு, இலங்கைப் பத்திரிகைக் காரருக்கு பேட்டியே கொடுக்கக் கூடாதென்று எஸ். எஸ்.

[5 ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பங்களைப் பெறுவது வாழ்க்கையின் இலட்சியமல்ல. பரிபூரணமடைவதே முடிவான இலட்சியமாகும்.

அறிவை இழந்தவன் தானே அழிவுபட்டவன் ஆகிறன். ஏனென்றால் நெறி வழுவுதல் மாய்தலுக்கு ஒப்பாகிறது.

— கீதை. விளக்கத்தில் சுவாமி சித்பவானந்தர்.

## கங்கைக் கரை.....

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆங்கில ஆட்சிக்கு அடிமைப்பட்டிருப்பதை விரும்பவில்லை. ஏழைமக்களின் எண்ணிக்கை மிகுந்து, வயிற்றுக்கு உணவும் இன்றிவாடுவதையும், பொருளாதாரச் சீர்குலைவையும், சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளையும் மாற்றியமைத்து, மலர்ச்சி காணவேண்டும் என்ற ஆர்வம் நாட்டின் படித்த கூட்டத்தினருக்கு இயற்கையாக எழுந்தது. [வளரும்]

## மறுபிறவி......

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

யச் செய்யும் 'கோலாவாலா' உடையோ எதுவுமின்றி உயர் தமிழ்ப் பெண்ணுக அங்கே உட்கார்ந்திருந்த விஜயகுமாரியிடம் சென்று 'ஈழநாட்'டிலிருந்து வந்திருக்கின்றேன்'' என்று எனது நாட்டையும் நான் வேலை செய்யும் பத்திரிகையையும் ஒரு சேர அறிமுகப்படுத்தினேன். அதைத் தொடர்ந்து, எமது பத்திரிகைக்கு பேட்டியொன்று தரவேண்டுமென்று கேட்டேன். அவரும் மலர்ந்த முகத்துடன் மாலை 5 மணிக்கு வீட்டுக்கு வரும்படி சொன்னார். எனக்கு ஒரே மகிழ்ச்சி, பொலிஸ்காரன் மகளாகவும் சாரதாவாகவும், பூமாலையாகவும் வெள்ளித் திரையில் தோன்றி தனது திறமையான நடிப்பினால் என்னை குலுங்கிக் குலுங்கி அழவைத்து அதன் மூலம் எனது அனுதாபத்தையும் அபிமானத்தையும் ஒருசேரப் பெற்ற 'விஜி' அக்காவைப் பார்த்து மட்டுமல்ல, அவரோடு அரை மணிநேரம் பேசுவதற்கு ஒரு வாய்ப்பும் கிடைத்திருக்கிறதே என்பது தான் அதற்குக்காரணம்.

## இலங்கை....

நம்நாட்டு பிரமுகர்கள்—3

# திருவாளர் எழுத்துவாதி

திருவாளர் எழுத்துவாதி எழுத்துலகுக்குப் புதியவர் அல்ல. ஆனால் அவர் எழுத்தாளருமல்ல. ஆகவேதான், அவரைநான் 'எழுத்துவாதி' என்ற பெயரில் உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்க விரும்புகிறேன்.

எழுத்துவாதியின் எண்ணம், இலட்சியம், பேச்சு எல்லாமே எழுத்துப்பற்றியே இருக்கும். ஆனால் எழுத்துலகுக்குத் தமது சொந்தப் படைப்பு எதுவையும் அவர் அளித்ததாகத் தெரியவில்லை. அவர் தொழிலெல்லாம் மற்றைய எழுத்

'மயிலன்'

தாளர்பற்றியும், அவர்தம் படைப்புகள் பற்றியும் விமர்சிப்பதேயாகும்.

ஆரம்ப காலத்தில் இவரது சட்டைப்பையை அலங்கரித்தது 'பாக்கர்' பேனு என்று கேள்வி. வெள்ளை வேட்டி, வெள்ளைச்சட்டை, சட்டைப் பையில் பேனு, கையிலே ஒரு கறுத்தப்பை, காலிலே ஒருசோடிசெருப்பு, சில சமயம் மூக்குக்கண்ணுடி இவை எழுத்துவாதியின் தோற்றத்தைப் பறைசாற்றுவன. இவருடைய சட்டைப்பையில் அலங்காரமாகக் காணப்பட்டதாகச் சொன்னேனே, அந்தப்'பாக்கர்' பேனு, காலச்சிதைவில் சிக்குண்டு 'சுவாண்' பேனுவாகிப் பின்னர் 'பைலட்' ஆகி, இப்போது 'போல் பொயிண்ட்' பேனுவாகக் கீழிறங்கியுள்ளது. ஆனாலும் எழுத்துவாதி மாறவில்லை. அன்றைய எழுத்துவாதியே இன்றைய எழுத்துவாதியுமாகத்திகழ்கிருர்.

எழுத்தாளர் சங்கங்களை உருவாக்குவதில் எழுத்துவாதி முன்னிற்பார். இலக்கியத்தின் தரத்தைஉயர்த்த வேண்டும், எழுத்தாளரிடையே ஒற்றுமை வேண்டும், வாசகர்களிடையே விழிப்புணர்ச்சிவேண்டும் என்றெல்லாம் இந்த எழுத்தாளர் சங்கங்களில் நீட்டிமுழக்க அவர் தயங்கமாட்டார். சங்க வேலைகளைச் சரிவரச் செய்ய நேரமில்லாத முழுநேர எழுத்தாளர்களும்

புகழ்பெற்ற மர்ம நாவலாசிரியை என்பது அவருக்குத் தெரியவேண்டிய அவசியமில்லையே!

இந்தக்கதைக்கும், எங்கள் எழுத்துவாதிக்கும் தொடர்புண்டு. இலக்கிய நூல்கள் பற்றியும், அவற்றின் ஆசிரியர்கள் பற்றியும்அவர் பேச ஆரம்பித்துவிட்டால், நான் மேலே குறிப்பிட்ட சரித்திர ஆசிரியரின் நிலைதான் எங்கள் எழுத்துவாதிக்கும். யாரோ எழுதிய நூலுக்கு வேறு யாரையோ ஆசிரியராக்கி அந்த நூலை அவர் விமர்சிக்கும்போது, கேட்டுக்கொண்டிருப்போரில் இரக்கமற்ற சிலர் உள்ளுக்குள் சிரித்துக்கொள்வர்; இரக்கமுள்ளவர்கள் அனுதாபப்படுவர்.

எழுத்துவாதியை நாம் குறைசொல்வதற்கில்லை. அவரதுநோக்கங்களில் தீங்கு எதுவுமில்லை. அவரது குறைகள் மேதாவித்தனமும், அதிகப் பிரசங்கித்தனமுமேயாகும். அவருடைய முன்னேற்றத்துக்குத் தடையாக அமைபவையும் இக்குணங்களே. ஆனால், எழுத்துவாதி போன்றோர் சிக்காவிடில் எழுத்துலகில் வர்ணம் இருக்காது; சுவை இருக்காது.

எழுத்துலகில்எழுத்தாளர் பலர் உண்டு. ஆனால்,எழுத்துவாதிகள் சிலரே இருக்கிறார்கள். அவர்களுடைய இனம் பல்கிப்பெருகாது, அளவோடு நிற்க வேண்டுமென்பதுதான் எழுத்தாளர் பிரார்த்தனை. ஏனெனில், ஈற்றில் எழுத்தாளர் என்ற பரம்பரையே செத்தொழிந்து, எழுத்துவாதிகளே எழுத்துலகில் எஞ்சி நிற்பர் என்பதே அவர்கள் கவலை. பிறகு, எழுத்துலகின் கதி?

அடுத்த வாரம்—

திருவாளர் திரிபுவாதி

# நாடினோர்க்கு நலமளிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி

— நாகமணி கோபாலகிருஷ்ணன் —

இலங்கையிற் சைவ சமயம் எக்காலத்தில் தோன்றியதென்பதற்குச் சான்று பகரச் சரித்திரம் இடமளித்திருக்கவில்லை. சைவசமய வரலாறு இத்தகைய ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டு நிற்பதால், இதன் தொன்மையை அளவிட முடியாது. 'முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே' என மணிவாசகப் பெருந்தகை சிவனைப்பற்றிக் கூறிய சிறப்பியல்பு அவனுடன் சம்பந்தப்பட்ட சைவசமயத்திற்கும் உண்டென்பதற்கையமில்லை. இவ்வுண்மையினைச் சைவசமயிகளுக்கு நன்குணர்த்திக் காண்பித்து விளங்குவது நயினுதீவிலுள்ள நாகபூஷணி அம்மை ஆலயமாகும்,

பூர்வீக காலத்தில் அம்பிகையை ஒரு நாகம் பூசித்து வந்தது. ஒரு நாள் அந்நாகம் அம்பிகைக்கு அர்ச்சனை செய்தற்பொருட்டு மலர் கொய்துவரும் வழியில் அதாவது இன்று புளியந்தீவு என்று அழைக்கப்படும் இடத்திலிருந்து வரும்பொழுது ஒரு கெருடன் அந்நாகத்தைக் கொல்லும் நோக்குடன் எதிர்க்கலாயிற்று. கெருடனைக் கண்டஞ்சிய நாகம் கடற்கரைக்கண்மையிலுள்ள கல்லொன்றினைக் கெட்டியாகப்பற்றிக்கொண்டது. அந்நாகத்தை எப்படியெனினும் கொன்றுவிடவேண்டுமென்ற கர்வம் கொண்ட கெருடன் பக்கத்தேயுள்ள இன்னொரு கல்லின்மீது அமர்ந்துகொண்டது. இவ்வேளையிலே, வைசிகன் ஒருவன் கடல் வழியே மரக்கலத்தில் வந்துகொண்டிருக்கின்றான். பாம்பின் துன்பத்தையும் கெருடனின் ஈவிரக்கமற்ற செயலையும் கண்ட அவன் கெருடனை, நாகத்தை விட்டுவிடும்படி மன்றுடியும் அது அகல்வதாகத் தெரியவில்லை. இறுதியில் ஒரு முடிவுக்கு வந்ததாய் வணிகனின் செல்வமெல்லாவற்றையும் தந்துவிட்டால் பாம்பைக் கொல்லாது விட்டுவிடுவதாக வணிகனுக்கு வாக்களித்தது. ஓர் உயிரிலும் பார்க்கத் தன் செல்வம் அத்துணை மேன்மைமிக்கதல்ல என்றுணர்ந்த வணிகனும் தன் திரைகடலோடித் தேடிய செல்வமெல்லாவற்றையும் அம்பிகையைப் பூசிக்கும் மன்னுயிர் ஒன்றுக்காக அர்ப்பணித்துப் பாம்பினைக் கொடுஞ்செயல் புரியும் கெருடனிடம் இருந்து விடுவித்து தன்வழியேகினுன். வணிகனும் தன் வீடுசென்று தன் மனைவிக்கு நடந்தவற்றைக்கூறினுன். அன்று இரவு அவர்கள் நித்திரை செய்யும் போதுஅவர்களின்வீடு ஒளிப்பிளம்பாகக் காட்சி தந்தது. காரணம் என்னவோவென அவர்கள் பார்த்தபொழுது அவ்வறையில் நாகரத்தினக் கற்கள் அங்கும் இங்குமாகச் சிதறிக் கிடப்பதைக் கண்ணுற்று மிக வியந்து அம்பிகையின் அருளின் நிமித்தமாகவன்றே இவை எமக்குக் கிடைத்தனவென அறிந்து உடனேயே நயினுதீவுக்குப் புறப்படலாயினர்.

நயினுதீவிற் கோவில் கொண்டிருந்த நாகம்மாளுக்குச் சிறந்த ஆலயம் கட்டுவித்தார்கள். வீதிகளும், கோபுரங்களும், பூசைமுறைகளையும் உண்டுபண்ணினுர்கள். இதைப் பேணுதற்கு ஆட்களும், பூசைசெய்வதற்கு 'நயினுபட்டர்' என்ற அந்தணரையும் அமர்த்தினுர்கள். இன்று இக்கோவிலுக்கு வடபால்அமைந்திருக்கும் கடற்கரையோரத்தில் பாம்பு சுற்றிக் கல், கருடன் கல் என்ற இரண்டும் முற்போந்த சரித்திரவரலாற்றுக்கு இடமளிப்பனவாகவிருப்பதுகவனிக்கத்தக்கது.

இத்தகைய பெருமையும், தொன்மையும் பெற்றுவிளங்கும் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறும். அதில் அதி விசேடித்த திருவிழாக்கள் கைலாசவாகனத் திருவிழாவும், தேர், தீர்த்த திருவிழாக்கள் என்றுல்மிகையல்ல. 'பெண்ணின் நல்லாளொடு பெருந்தகை இருந்ததே' என்ற திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் அருள்வாக்கிற் கிணங்க அம்மை அப்பனுகக் கைலாச வாகனத்தில் எழுந்தருளி அடியார்க்களிக்கும் காட்சி திருக்கைலாசக் காட்சியைத் தத்ரூபமாகச் சித்தரிக்கின்றதென்றே சொல்லவேண்டும்.

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுள்ள உலக நாயகியாகிய நாகேஸ்வரி கருணைத்திருக்கோலத்துடன் வானளாவிய சித்திரத் திருத்தேரில் பவனிவந்து அடியார்க்கருளும் காட்சியைக் காணில் கல்நெஞ்சமும் கசிந்துருகும். தேர்த் திருவிழாவன்று அம்பிகையின் காட்சி ஓர் அற்புதக் காட்சி! ஆனந்தக்காட்சி!

உற்சவகாலத்தில் இங்கு வரும் அடியார்களின் உள்ளப்பசியை அம்பிகை அகற்றும் அதே நேரத்தில் உடற்பசியை நயினை யாத்திரீகர்கள் அன்னதான சபையினர் தீர்க்கின்றனர். பல்லாயிரக் கணக்கில் திரண்டு சனசமுத்திரமெனக் காட்சி தரும் மெய்யடியார் கூட்டத்தினை அன்புடனும், பணிவுடனும் வரவேற்று இன்முகத்துடன் இன்னமுதளிக்கும் அச்சபையின் தொண்டிற்கு ஈடுஇணையாக எதையும் ஒப்புநோக்கல்சரியன்று.

இவ்வருட அம்பிகையின் கொடியேற்றம் வைகாசித் திங்கள் 25 ஆம் நாளன்றும் [8-6-67], தேர்த்திருவிழா ஆனித்திங்கள் 7 ஆம்நாளன்றும் [21-6-67] தீர்த்தோற்சவம் ஆனித்திங்கள் 8 ஆம் நாளன்றும் [22-6-67] நடைபெற அம்பிகை அருள் பாலித்திருக்கின்றுள்.

# உங்கள் இராசி பலன்

பண்டித வித்துவான்

எம். வி. பாலசுந்தரம் பீ. ஓ. எல். எப். ஆர். ஏ, எஸ்.

### மேடம்

இவ்வாரம் மத்திமபலன்களைத் தரும் வாரமாகும். அதிகமான செலவுகள் ஏற்படும். குடும்ப சுகக் குறைவுண்டு. தொழிலாளர்கள் ஒப்பந்தங்களை விலக்குதல் நலம். கவிஞர்களுக்கு இவ்வாரம் கஷ்டபலன்களையே கொடுக்கும். கைத்தொழிலாளர்களுக்கு மிகமுன்னேற்றமுண்டு. வயிற்றில் ஒரு சிலருக்குக் கட்டு சம்பந்தமான நீர்ப்பீடைகாணும்.

### இடபம்

இவ்வாரம் கஷ்டமான பலன்களைத்தரும் வாரமாகும். அநாவசியமான செலவுகள் ஏற்படலாம். பொருளாதாரம் குறைவடையும். காரியதாமதமேற்படும். வியாபாரம் மந்தநிலை ஏற்படும். வாகனத்தொழிலாளர்கள் கவனமாக இருக்க வேண்டும். உத்தியோக வகையினருக்குத் தொழில் வகையில் பல தொல்லைகள் நேரிடும்.

### மிதுனம்

இவ்வாரம் கஷ்டமான பலன்களைத்தரும் வாரமாகும். வியாபாரம் நன்ருகவே நடைபெறும். குடும்பசுகமேற்படும். பகைவர்களின் தொல்லைகள் குறைவடையும். யந்திரத்தொழிலாளர்களுக்கு அதிக வருமானம். கலைஞர்களுக்குப் புகழ் உண்டு.

### கடகம்

இவ்வாரம் சிறந்த பலன்களைத்தரும் வாரமெனலாம்.

மிக முன்னேற்றம் காணும் வாரமாகும். பொருள் வருவாயுண்டு. பதவியேற்றம் உண்டு. வழக்கு வகையில் தவணையெடுத்தல் நலம். தேகநலம் சிறிதுகுறைவடையும்.

### துலாம்

இவ்வாரம் மத்திமபலன்களைத் தரும் வாரமாகும். தேககசுகம் நன்ருகவே காணும். பொருள் வருவாய் மந்தநிலையடையும். உத்தியோக வகையினருக்கு எதிர்பாராதவகையில் பலகஷ்டங்கள் தோன்றி மறையும். இரும்புத் தொழிலாளர்கள் மிகவும் கவனமாக நடந்து கொள்ளவேண்டும். வியாபாரத்தில் வியாபாரிகளுக்கு அற்ப ஆதாயமுண்டு.

தேகத்தில் விஷநீர் பீடை காணும். வாக்குவாதமுண்டு. பொறுப்புணர்ச்சிகளை மற்றவர்களிடம் ஒப்படைக்கக் கூடாது. வழக்குவகையினர்களுக்குப் பல நஷ்டங்களுண்டாகும்.

### மகரம்

இவ்வாரம் மத்திமமான பலன்களைத்தரும் வாரமாகும். வியாபாரம் மந்தமாகவே நடைபெறும். இலாபமுண்டாகும். தொழில்வகையில் ஈடுபாடுடையோர் கடன்பட நேரிடும். கைத்தொழிலாளர்கள் கவனமாகஇருக்க வேண்டும். சாரதிகளும் கவனம் வேண்டும். இனசனத்தில் பல தொல்லைகளுக்குரிய விடயங்கள் நடக்கும். கடன்தொல்லையுமுண்டு.

### கும்பம்

இவ்வாரம் மிகநல்லபலன்களைத் தரும் வாரமெனலாம். தேககசுகமுண்டு. தனஇலாபம் உண்டு. காரியசித்தியுண்டு. எதிர்பாராத வகையில் பொருள்வருமானமுண்டாகும். கொடுக்கல் வாங்கல்களினுல் பொருள் தடைப்பட்டிருப்பின்

# திருவள்ளுவர் ஒரு பௌத்தரே

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பௌத்த மதத்திற்கும் ஆற்றிய தொண்டுகளை நாம்

வள்ளுவரின் ... என்ன? திருவள்ளுவர் ... சித்தர் ஒரு பெரிய

...ணமென்றும் ... வழிபடும் வைஷ்ணவர்களை பகவத்தாஸ் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருசேரப் பெற்ற 'விஜி' அக்காவைப் பார்த்து மட்டுமல்ல, அவரோடு அரை மணிநேரம் பேசுவதற்கு ஒரு வாய்ப்பும் கிடைத்திருக்கிறதே என்பது தான் அதற்குக்காரணம்.

## இலங்கை....

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆர். கண்டிப்பாகவே சொல்லிவிட்டாராம். சமீபத்தில் அம்மாவும் எஸ். எஸ். ஆரும் பிரிந்திட்டாங்க என்று இலங்கைப் பத்திரிகையில் பொய்ச் செய்தி போட்ட ஆத்திரத்தால் தான் எஸ். எஸ். ஆர். அப்படி ஆத்திரத்துடன் சொல்லி விட்டார்'' என்று அந்த ஆசாமி என்னிடம் சொன்னதும், அதன் பிறகும்நான் அங்கு நிற்பதில் என்ன அர்த்தமிருக்கிறது?


**சேவை**

**உல்லாசப்பிரயாணிகளே!**

உல்லாசப் பிரயாணங்கள் ஒழுங்கு செய்வதற்கு நம்பிக்கையான ஸ்தாபனம்

**அருணு ஏஜன்ஸீஸ்,**

**அளவெட்டி.**

2316


...டையே ஒற்றுமை வேண்டும், வாசகர்களிடையே விழிப்புணர்ச்சிவேண்டும் என்றெல்லாம் இந்த எழுத்தாளர் சங்கங்களில் நீட்டி முழக்க அவர் தயங்கமாட்டார். சங்க வேலைகளைச் சரிவரச் செய்ய நேரமில்லாத முழுநேர எழுத்தாளர்களும் சிறுகதை உருவகக்கதை எழுத்தாளர்களும் நாவல், கவிதை எழுத்தாளர்களும் எழுத்துவாதியின்சேவையை 'நன்கு பயன்படுத்தத் தவறுவதில்லை. இந்த உள்நோக்கத்துடன்தான் அவர்கள், எழுத்துவாதியின் அதிகப் பிரசங்கித்தனத்தையும் பொறுத்துக்கொள்வார்கள்.

எமது கல்லூரியில் சரித்திரம் கற்பித்த ஆசிரியர் ஒருவர் வெறும் புத்தகப் பூச்சி. உயர் வகுப்புக்களுக்கும் அவர் சரித்திரம் சொல்லிக் கொடுத்தார். பொது அறிவு என்பது அவரிடம் மருந்துக்கும் இல்லை. ஒரு நாள் அவர், கிரேக்க சரித்திரம்பற்றி யார் யார் எழுதிய நூல்களைப்படிக்கிறீர்கள் என்று எங்களிடம் கேட்டார். அப்போது, அவரைச் சோதிக்க, நான் அகதா கிறிஸ்டி எழுதிய 'கிரீசின் சரிதைச் சுருக்கம்' படித்ததாகப் புளுகிவிட்டேன். என் இலக்குத்தப்பவில்லை. அவர் 'ம்...சரி' என்றுவிட்டு, மற்ற மாணவனை விசாரித்துக்கேட்டார். பாவம்! அகதா கிறிஸ்டி என்பவர் உலகப்...





சென்ற் அந்தோனிஸ் குறூப்

516, ஸ்கினேஸ் வீதி தெற்கு, கொழும்பு-10.

டெலிபோன்: 4261, 4261.


# திருவள்ளுவர் ஒரு பௌத்தரே

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பௌத்த மதத்திற்கும் ஆற்றிய தொண்டுகளை நாம் அறியலாம்.

குறுகிய இனவாரி வகுப்புவாதம் பேசப்படும் இந்நாளில் இந்த உண்மைகள் வேண்டுமென்றே மறைக்கப் படுகின்றன அல்லது வகுப்புவாதத்தால் பயன் அடையும் ஒரு கும்பலால் திரிக்கப்படுகின்றன.

### சிங்களம் ஆரிய மொழியா?

சிங்களவர்களிலே ஒரு சிலராவது சிங்களவராகிய எங்களுக்கும் தமிழர்களாகிய உங்களுக்கும் கலாச்சார ரீதியிலோ, இனரீதியிலோ வேறுபாடு கிடையாது என்பதை உணர்கிருர்கள். மொழியைப் பொறுத்தவரையில் சிங்களம், ஆரிய மொழியா அல்லது திராவிட மொழியா என்று இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. மேலைத்தேசத்தவர் சிங்கள மொழியை ஆரிய மொழியாகக் கணித்தாலும் கூட அதை நாம் கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக்கொண்டுவிட முடியாது.

வள்ளுவர் எந்தக்காலத்தில் வாழ்ந்தார் என்பது சரியாகச் சொல்ல முடியாத ஒன்ருக இருக்கின்றது. மேலைத்தேசத்தவர்கள் வள்ளுவர் கிறிஸ்து சகாப்தத்தின் முற்பகுதியில் வாழ்ந்திருக்கலாமெனக் கருதுகிருர்கள். ஆனல் ஒன்றைமட்டும் நாம் நிச்சயமாகச் சொல்ல முடியும். அதாவது வள்ளுவர் காலத்தில் பௌத்தம் தமிழ் நாட்டில் ஒரு செழிப்புற்ற மதமாக விளங்கியது என்பதே. பகவான் புத்தரின், 'உலகத் துன்பங்களிலிருந்து விடுதலை' என்ற செய்தி தமிழகத்தில் எப்பொழுது பரப்பப்பட்டது? அதுவும் எங்களுக்குத் தெரியக்கூடியதாக இல்லை. ஆனல் பகவான் புத்தரின் செய்தியை இலங்கைக்குக் கொண்டுவந்த அசோகச் சக்கரவர்த்தியின் மகன் மகிந்தன் இலங்கைக்குவரும் வழியில் தமிழகத்திலுள்ள காஞ்சிபுரப் பேரரசில் தங்கினன். இது அசோகனுக்கு முற்பட்ட காலத்திலேயே தட்க்ஷண பாரதம் என்று அழைக்கப்பட்ட தமிழ் நாட்டில் பௌத்தம் வளர்ந்திருந்ததுமட்டும் அல்ல அதற்குப் பிறகுதான் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது என்பதை நிரூபிக்கின்றது.

வள்ளுவரின் சமயம் என்ன? திருவள்ளுவர் ஒரு சித்தர் ஒரு பெரிய யோகி மட்டுமல்லாது ஓர் அறிஞருமாவார். ஆதலால் சாதாரணமாக அவருக்கு ஒரு சமயம் இருந்திருக்குமென்பது எதிர்பார்க்க முடியாது. ஒரு சித்தர் என்ற முறையில் சமயத்திற்கு அப்பாற்பட்டிருந்தார். ஆனல் உலகத்திற்கு விமோசனத்தைத்தரும் அவரது திருக்குறள் என்ன சமயத்தைச் சார்ந்ததாக இருக்கின்றது. அவரது அறிவுரைகள் எந்தச் சமயத்தின் அறிவுரைகளோடும் ஒத்துப் போகின்றது. அந்தக் காலத்தில் இருந்த எந்தச் சமயத்தைப்பற்றியும் திருக்குறளில் கூறப்படவில்லை. ஆனல் தன்னுடைய திருக்குறளின் முதல் அதிகாரத்திலேயே திருவள்ளுவர் தனது வழிகாட்டியாகக்கொண்டவரைக் குறிப்பிட்டுள்ளார். அந்த அதிகாரம் உரை சொல்வோரால் கடவுள் வாழ்த்து என்று அழைக்கப் பட்டாலும்கூட திருவள்ளுவர் புத்தருக்கு ஒரு வழிபாடாகவே அமைத்துள்ளார். வேறு எந்தக் கடவுளுக்குமல்ல.

### பகவான் என்ருல் புத்தரையே குறிக்கும்

''அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'' என்று திருவள்ளுவர் கூறுகின்ருர். இந்த ஆதி பகவன்யார்? எழுத்திலே 'அ' போல உலகிற்கே முதன்மையானவன். பகவன் என்பது புத்தரின் ஒரு வணக்கத்திற்குரிய பெயர். புத்தர் என்பது பகவன் என்பதற்கிணையான ஒரு சொல். ஆதிபகவன் என்பது ஆதிபுத்தர் என்பதற்கு இணையான ஒரு சொல். இதிலிருந்து பகவன் என்ற சொல் புத்தருக்கு மட்டுமல்ல வேறு சில ஞானிகளுக்கும் இலக்கியகர்த்தாக்களால் கையாளப்பட்டுள்ளது என்பதை நாம் ஒப்புக்கொண்டேயாகவேண்டும். உதாரணமாக மகாபாரதத்தை எழுதிய வியாசர் குருசேத்திரப் போரிலே அருச்சுனனின் தேர்ச்சாரதியாக இருந்து சனதன தர்மத்தை உபதேசித்த கிருஷ்ணர் ஆகியோர் பகவான் வியாசர், பகவான் கிருஷ்ணர் என்றே குறிப்பிடப்படுகிருர்கள். கிருஷ்ண பகவானின் உபதேசங்கள் பகவத்கீதை என்றே அழைக்கப்படுகிறது. விஷ்ணுவைப்பற்றிக் கூறப்படும் புராணம் பகவத் புராணமென்றும் விஷ்ணுவை வழிபடும் வைஷ்ணவர்களை பகவத்தாஸ் என்றும் அழைக்கப்படுவதைக் காண்கின்ருேம். இருந்தும் சமஸ்கிருத மொழி வல்லுனர்கள் பகவான் என்ற சொல்லை புத்தருக்குத்தவிர வேறு யாருக்கும் பாவிக்கவில்லை. உதாரணமாக அமரகோஷ என்ற சமஸ்கிருதச் சொல்லகராதியில் புத்தர் எப்பொழுதும் பகவான் என்றே குறிப்பிடப்பட்டுள்ளார். பௌத்தர்களுக்கிடையில் புத்தரைத்தவிர வேறு எவரையும் பகவான் என்று அழைப்பதில்லை. உலகில் எல்லாப்பகுதியிலும் உள்ள பௌத்தர்கள் தினமும் பாராயணம் செய்யும் பௌத்த மந்திரத்தில் முதலிலும் முடிவிலும் 'பகவான்' என்றே அழைக்கப்படுகின்ருர்.

மகாயான பௌத்த தத்துவத்தின்படிக்கு ஆதிபகவன் என்பது ஆதிபுத்தன் என்பதேயாகும். ஆதிபுத்தன் என்பது இந்து வேதாந்தமான பரப்பிரம்மத்தின் மறுபகுதியே. மகாயான பௌத்த நம்பிக்கையின் படிக்கு பகவான் என்பது புத்தனேயாகும். பௌத்தன் அல்லாத ஒருவன் புத்தருக்கு வணக்கம் கூறி தனது இலக்கியத்தை ஆரம்பிப்பாஞ? எனவே திருக்குறளின் முதலதிகாரத்தின் முதல் அடியிலிருந்தே வள்ளுவர் ஒரு பௌத்தன் அதுவும் ஒரு மகாயான பௌத்தன் என்பது தெளிவாகிறது. மகாயான பௌத்தம் தான் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் இருந்ததென்பது தெரிந்ததே. அந்நாள் வழக்கப்படி பௌத்த இந்து எழுத்தாளர்கள் உலகில் ஈடு இணையற்றவனுக்கு தங்கள் வணக்கத்தைச் செலுத்தியே தங்கள் இலக்கியத்தை ஆரம்பித்தார்கள். ''மலர்மிசை ஏகினுன் மாண் அடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்'' என்றகுறள் குறிப்பிடுவது யாரை? இது தாமரைமலர்களிலே பிறந்து வளர்ந்து ஏழு நிலைகளை அடைந்த போதி சத்தரையே குறிப்பிடுகின்றது. திருக்குறள் முழுவதும் பௌத்த கருத்துக்கள்பரப்பப்பட்டிருக்கின்றன. வள்ளுவர் கூறிய கருத்துக்கள் 'உம்மகஜாதக' என்ற நூலிலும், 'சிகலோவத சூத்திர' என்ற நூலிலும் பிரதிபலிப்பதைக் காணலாம். இவைகளிலிருந்து நாம் அறியக்கூடியது என்னவென்ருல் திருக்குறள் பௌத்த சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதேயாம்.

### எங்களுக்கும் உரிமை உண்டு

திருக்குறள் தமிழர்களினுல் உலகத்திற்கு வழங்கப்பட்ட சொத்து. தமிழர்களாகிய உங்களுக்கு எவ்வளவு உரிமையிருக்கிறதோ அவ்வளவு சிங்களவர்களாகிய எங்களுக்கும் உண்டு. எங்கள் சிங்கள இலக்கியங்களை வளர்ப்பதற்கு நாங்கள் எப்பொழுதும் தமிழ் இலக்கியங்களில் கடன்பட்டுள்ளோம். 17-ம் நூற்ருண்டில் வாழ்ந்த ''அழகிய வண்ண'' என்ற சிங்களப் புலவர் தமிழ், சமஸ்கிருத, பாளி மொழிகளைப் படிக்காதவர்கள் முட்டாள்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதன் அடிப்படையில் தமிழ்ப்பிள்ளைகள் சிங்களத்தையும் சிங்களப்பிள்ளைகள் தமிழையும் பயில்வார்களேயானுல் அங்கே மொழிப் பிரச்னை இருக்காது பரஸ்பர அவநம்பிக்கை இருக்காது; இலங்கையில் தமிழும்சிங்களமும் பிரதேசஅடிப்படையில் வளராது; சமத்துவ அடிப்படையில் வளர்வதாகுக.

...தொல்லைகள் குறைவடையும். யந்திரத்தொழிலாளர்களுக்கு அதிக வருமானம். கலைஞர்களுக்குப் புகழ் உண்டு.

**கடகம்**

இவ்வாரம் சிறந்த பலன்களைத்தரும் வாரமெனலாம். உத்தியோகஸ்தர்களுக்கு மிக முன்னேற்றமுண்டு. காரியங்கள் சிறிது தாமதமாகவே கைகூடும். களத்திர ஒற்றுமையுண்டு. எதிர்பாராத வகையில் பொருள் வருவாயுண்டு. தொழிலாளர்களுக்கு பொருள்வருவாய் மத்திமமாகவே நடைபெறும்.

**சிங்கம்**

இவ்வாரம் மிகவும் கஷ்ட பலன்களைத்தரும் வாரமாகும். இல்லத்தில் பலநன்மைகள் நடைபெறும். பொருள் வகையில் அமைதி குலையும். எதிர்பாராதவகையில் தனமுடையேற்படும். தேகாரோக்கியம் குறைவடையும். வியாபாரம் மத்திமமாகவே நடைபெறும். தொழிலாளர்களுக்கு மிகவும் கஷ்டபலன்களையே கொடுக்கும். வழக்கு வகையினருக்கு தோல்வியேற்படும்.

**கன்னி**

இவ்வாரம் நல்ல பலன்களைத்தரும் வாரமெனலாம். உத்தியோகஸ்தர்களுக்கு மந்தநிலையடையும். உத்தியோக வகையினருக்கு எதிர்பாராதவகையில் பலகஷ்டங்கள் தோன்றி மறையும். இரும்புத் தொழிலாளர்கள் மிகவும் கவனமாக நடந்து கொள்ளவேண்டும். வியாபாரத்தில் வியாபாரிகளுக்கு அற்ப ஆதாயமுண்டு. கொடுக்கல் வாங்கல்களை விலக்கவேண்டும். உடற்சுகம் குறைவடையும்.

**விருச்சிகம்**

இவ்வாரம் நல்ல பலன்களைத் தரும் வாரமாகும். வியாபாரம் அற்பலாபமடையும். தனப்பெருக்கம் உத்தியோக வகையினருக்குண்டு. பலர் தொல்லைகளுக்குள் அகப்பட்டு வருந்துவர். தொழிலாளர்களுக்குப் பல தொல்லைகளையும் கஷ்டங்களையும் கொடுக்கும். எதிர்பாராதவகையில் பொருள் வருவாயுண்டு. சத்துரு தொல்லை இருந்தாலும் தோல்வியடைவார்கள் சத்துருக்கள். பிரயாணம் விலக்கவும்.

**தனு**

இவ்வாரம் கஷ்டபலன்களைத் தரும் வாரமாகும். கொடுக்கல் வாங்கல்களில் பிணக்குகள் உண்டாகும்.

இவ்வாரம் மிகநல்லபலன்களைத் தரும் வாரமெனலாம். தேகசுகமுண்டு. தன இலாபம் உண்டு. காரிய சித்தியுண்டு. எதிர்பாராத வகையில் பொருள்வருமானமுண்டாகும். கொடுக்கல் வாங்கல்களினுல் பொருள் தடைப்பட்டிருப்பின் கைகூடும். தானியம்கொள்ள விற்க அதிகலாபமேற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பாராதவகையில் பல நன்மைகளுண்டாகும். பெரும் உத்தியோகவகையினருக்குப் பதவிகள் கிடைக்கும்.

**மீனம்**

இவ்வாரம் நற்பலன்களைத் தரும் வாரமெனினும் உத்தியோகத்தில் பல தொல்லைகள் தோன்றி மறையும். குடும்பத்தில் தொல்லைகள் தோன்றிமறையும். வியாபார சம்பந்தமாகவேநடைபெறும். சிலர் எதிர்பாராத வகையில் திரவிய இலாபத்தை அடைவார்கள். பிரயாணத்தில் பொருள்வருமானமுண்டு. உறவினர்களிடையே பரஸ்பர அன்பும் உதவியும் கிடைக்கும்.

# கனவு நனவாகிறது

— செல்வி க. பூரணம் —

வானமளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழியாம் நம் செந்தமிழ் செழிப்புறத் தமிழகச் செந்தமிழ் செல்வர்கள் பலர் அயராதுழைக்கின்றனர். இதுவரை வடமொழியும் ஆங்கிலமும் ஆக்கிரமித்த இடங்களில் தூய இனிய தமிழ் பொறிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் பேச்சிலும் எழுத்திலும் செயலிலும் புரட்சிகர முறையில் தமிழ் மக்களுக்கு வளம் பொலியும் புதுவாழ்வு அளிக்க விழையும் அண்ணு குழுவினரின் ஆட்சி தமிழகத்தில் செயல்படுவதேயாகும்.

தமிழகத்தில் மட்டுமன்றி, உலகிலே வாழும் தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி,

''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும், இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல்வேண்டும், மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை, திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ் செய்தல்வேண்டும்'' என்ற பாரதியார் கனவை நனவாக்கிவருகின்றனர். மலேசியாவில் முதலாவது உலக ஆராய்ச்சி மகாநாடு நடைபெற்ற காரணத்தால் கலந்துகொள்ள முடியாத தமிழ் ஆர்வமுடையோர் பலர் தமிழ் அரசுத் தலைநகரில் நடைபெறும் இரண்டாவது உலக ஆராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. இவ்வாராய்ச்சி மகாநாட்டின் பெரும் பொறுப்பினை ஏற்று நடாத்தும் உயர்திரு தனிநாயக அடிகள், ஈழநாட்டினைச் சேர்ந்தவர் என்பது நமக்கெல்லாம் பெருமை அளிக்கிறது.

தேன்மதுரத் தமிழோசை உலகமெலாம் பரவ வகை செய்ய உலகத் தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி உழைக்கும் இவ்வேளையில் ஈழம் வாழ் தமிழ் மக்கள் தமிழ் மொழி மூலம் தொடர்பு கொள்வதற்கு வெட்கப்படுகிருர்கள். தமிழ் மக்களின் அந்நிய மோகத்தாலும் தமிழ்ப்பிரதேசங்களில் தமிழ் தெரியாத உத்தியோகத்தர்கள் பலர் நியமிக்கப்பட்டுள்ளதாலும் தமிழ் மூலம் தொடர்புகொள்ள

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்து-இஸ்ரேல் யுத்தப் பின்னணி

... நடக்கும், நடக்கப் போகிறது, நடந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது நடந்தேவிட்டது!

இஸ்ரேலுக்கும் ஐக்கிய அரபுக் குடியரசுக்குமிடையில் சண்டை தொடங்கிவிட்டது. ஐக்கிய அரபுக் குடியரசுக்கு ஆதரவாக ஜோர்டான், சிரியா, சவூதி அரேபியா போன்ற நாடுகளும் இஸ்ரேலுடன் யுத்தத்திலிறங்கியுள்ளன. ஈராக், மொராக்கோ, குவெய்த், சூடான், அல்ஜீரியா, யேமன் ஆகிய அரபு நாடுகளும் இஸ்ரேலுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்து 'புனித யுத்தத்தில்' இறங்கத் தயாராகின. இதுவரை இந்த நாடுகள் பலவற்றின் படைகள் இஸ்ரேலுடன் யுத்தம் செய்யத் தொடங்கியிருக்கலாம். அரபுநாட்டுப் படைகள் யோர்முனைக்கு வந்து கொண்டிருக்கின்றன.

## தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிடுவதா?

ஐக்கிய அரபுக் குடியரசுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் உள்ள சினாய் பகுதியில் ஐக்கிய அரபுக்குடியரசுப் படைகளுக்கும் இஸ்ரேலியப் படைகளும் இடையில் தரையில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் இரு நாட்டு விமானப் படைகளும் போர் புரிந்து கொண்டிருந்தன, இதே சமயம் இஸ்ரேலின் வடக்குப் பகுதியில் இஸ்ரேல்மீது சிரியாவும் ஜோர்டானும் விமான தாக்குதல் நடத்தின. ஜோர்டானுக்கு உதவியாக சவூதி அரேபியப் படைகளும் வந்துகொண்டிருந்தன. இதே நேரம் ஈராக் போர் விமானங்களும் இஸ்ரேல்மீது தாக்குதல் நடத்தின.

நேற்று முன்தினம் அதாவது ஜூன் மாதம் 5-ந்திகதி அதிகாலையிலேயே இஸ்ரேலுக்கும் ஐக்கியஅரபுக்குடியரசுக்குமிடையில் சண்டை ஆரம்பமானது. இஸ்ரேல் தான் முதலில் தாக்குதல் நடத்தி சண்டையை ஆரம்பித்து வைத்தது என்று ஐக்கிய அரபுக் குடியரசும் ஐக்கிய அரபுக்குடியரசு தான் சண்டையைத் தொடங்கியது என்றும் இஸ்ரேலும் ஒருவரை

யொழிய சண்டையை விடவா போகிறார்கள். எப்படியோ சண்டை தொடங்கிவிட்டது. இருதரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. சண்டை நீடித்தால் இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இன்னும் அதிக சேதம் ஏற்படுவது மட்டுமல்லாமல் உலக நாடுகள் பலவற்றுக்குமே பல விதத்திலும் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும்.

### பாதுகாப்புச் சபை முயற்சி

மேற்காசியாவில் தோன்றியுள்ள யுத்தம் பரவி பெரும் விளைவுகளை ஏற்படுத்துவதற்கு முன் இஸ்ரேல்-அரபுநாடுகளுக்கிடையிலான யுத்தத்தை நிறுத்துவதற்கு ஐ. நா. பாதுகாப்புச்சபை பெரும் முயற்சி செய்துவருகிறது. இந்த முயற்சியில் இதை நீங்கள் வாசிக்கும்போது அது வெற்றியும் பெற்றிருக்கலாம்.

மேற்கு ஆசியாவில் அதாவது இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள யுத்தத்தை உடனடியாக நிறுத்துவது.

மேற்கு ஆசியாவில் தோன்றியுள்ள நிலைமை மோசமாகாமல் தடுக்கவும் ஆத்திரமூட்டும் அறிக்கைகளையும் செயல்களையும் வல்லரசுகள் செய்யாது தடுப்பதும் உடனடியாகச் செய்ய

## உலக மேடை

எஸ். எம். ஜி.

வேண்டிய அவசரத்தேவைகள்.

இஸ்ரேலுக்கு அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் மேற்கத்திய நாடுகளின் ஆதரவு இருப்பதும் ஐக்கிய அரபுக் குடியரசு, சிரியா ஆகிய அரபுநாடுகளுக்கு சோவியத் யூனியன் ஆதரவுஇருப்பதும் சமீபத்தில் இதை சோவியத்

மூன்றாவது உலகயுத்தமாக உருவெடுத்துவிடுமோவென உலகமக்கள் அஞ்சினர்.

### அமெரிக்கா, பிரி, பிரான்ஸ்


இஸ்ரேல்- அரபுநாடுகளுக்கிடையிலான சண்டையில் எந்த ஒரு பக்கத்துக்கும் சார்பாகஇருப்பதில்லையென பிரிட்டன் அறிவித்திருக்கிறது. சொல்லிலும் செயலிலும் இத்தகராறில் நடுநிலைமையைக் கடைப்பிடிக்கப் போவதாக அமெரிக்கா தெரிவித்திருக்கிறது. இந்த யுத்தத்தில் எந்தப் பக்கமும் சார்வதில்லை என்று பிரான்ஸும் கூறியிருப்பதுடன் இஸ்ரேலுக்கும் அரபுநாடுகளுக்கும் அனுப்பி வந்த ஆயுதங்களை நிறுத்திக் கொண்டு விட்டதாகவும் பிரான்ஸ் தெரிவித்திருக்கிறது. மேற்கு ஆசியாவில் யுத்தத்தை நிறுத்துவதற்கும் அமைதியை நிலைநாட்டுவதற்கும் ஐ. நா. பாதுகாப்புச்சபை எடுக்கும் முயற்சிகளுக்குத் தாங்கள் பூரணஒத்துழைப்பும் ஆதரவும் அளிக்கப் போவதாகவும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று மேற்கத்தியவல்லரசுகளும் இப்பொழுதுதெரிவித்திருக்கின்றன.

'தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடுதல்' என்று தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய இந்த வல்லரசுகளின் சொல்லும் செயலும் இப்படித்தானிருக்கின்றது.

பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் என்று ஒருநாடு உருவாவதற்கும் அதை உருவாக்கஉதவியதற்கும் இந்த மேற்கத்திய வல்லரசுகளும் அவைகளின்

'எண்ணெய்' வியாபார இலாபநோக்கமும் ஆதிக்க ஆசையுமே அடிப்படைக் காரணம் என்பது ஒருபுறமிருக்கட்டும். இஸ்ரேலுக்கும் அரபுநாடுகள் பலவற்றுக்கும் இந்த வல்லரசுகள் ஆயுதங்கள் வழங்கிவந்ததும் இருக்கட்டும். மேற்குஆசியாவில் இஸ்ரேலுக்கும் அரபு

பரசு எல்லையிலும் இஸ்ரேல்-ஜோர்டான், இஸ்ரேல்-சிரியா எல்லையிலும் நெருக்கடியான நிலை இருந்து வந்திருக்கிறது. இஸ்ரேல்-எகிப்து எல்லையில் சினாய் பகுதியிலிருந்து ஐ. நா. படைவாபஸ் பெறப்பட்டு அங்கு எல்லையின் இரு பகுதியிலும் இஸ்ரேல், எகிப்து துருப்புக்கள் குவிக்கப்பட்டதும் அக்காபா வளைகுடா இஸ்ரேலுக்கு தடைசெய்யப்பட்டதும்இத்தடையை முறியடிப்போமென இஸ்ரேல்சவால்விடுத்ததும் இந்த வல்லரசுகளுக்குத் தெரியாதவையல்ல. அக்




# ‘நடுநிலைமை வல்லரசுகள்’ இதுவரை என்ன செய்தன

காபா குடா தடைநீக்கப்படவேண்டுமென்றும் இந்த வல்லரசுகள் குரல் கொடுத்தன. பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் அமெரிக்காவுக்குச் சென்று அதிபர் ஜோன்சனைச் சந்தித்துப் பேசியதும் அங்கிருந்து 'எச்சரிக்கை விடுத்ததும் எதற்கு? இப்பொழுது எப்பக்கமும் சாராமல் நடுநிலைமை வகிக்கத் தீர்மா

டையில் எப்பக்கமும் சாராமல் நடுநிலைமை வகிப்பது என கூறும்இந்தமூன்று மேற்கத்திய வல்லரசுகள் ஆயுத வியாபாரம் செய்திருக்கின்றன. அதாவது மேற்காசியாவிலுள்ள நாடுகள்ஒன்றுடன் ஒன்று சண்டைபோட்டுக்கொண்டு என்றும் வேற்றுமைப்பட்டிருப்பதற்குத் தேவையான ஆயுதங்களை

## எகிப்து-இஸ்ரேல் படைபலம்

| | எகிப்து | இஸ்ரேல் |
|---|---|---|
| காலாட்படை | 3,50,000 | 3,00,000 |
| டாங்கிகள் | 1,500 | 1,000 |
| குண்டு விமானங்கள் | 100 | 40 |
| வேட்டை விமானங்கள் | 400 | 200 |
| நீர்மூழ்கிக் கப்பல்கள் | 9 | 4 |

இரு நாடுகளிடமும் நிலத்திலிருந்து வானம் நோக்கிச் செலுத்தக்கூடியதும், வானத்திலிருந்து வானத்துக்குப் போய் நிலத்தைத் தாக்கக்கூடியவையுமான ஏவுகணைகளும் இருக்கின்றன. இந்த ஆயுதங்களின் தொகையும், படைபலமும் சமீப காலத்தில் இருதரப்பிலும் அதிகரித்திருக்கக்கூடும். எகிப்து, சிரியா ஆகிய நாடுகளிடம் பெரும்பாலும் ரஷ்ய ஆயுதங்களும், இஸ்ரேல், ஜோர்டான் ஆகிய நாடுகளிடம் அமெரிக்க ஆயுதங்களும், போர் விமானங்களும் இருக்கின்றன. லெபனானிடம் பிரஞ்சு ஆயுதங்களும் சவூதி அரேபியாவிடம் பிரிட்டிஷ் ரக ஆயுதங்களும், போர் விமானங்களும் பெரும்பாலும் இருக்கின்றன.

னித்த இந்த வல்லரசுகள் மேற்கு[illegible] தோன்[illegible] புக்கு ஒரு மாதத்துக்கு முன் [illegible]

அவை கொடுத்திருக்கின்றன. இந்த ஆயுதங்களை வழங்கியது தவிர மத்திய தரைக் கடலில் அமெரிக்கா

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

ஆரம்பித்ததும் அது ஆயத்தநிலையில் நிற்கிறதாம்.

### 6-வது கடற்படை என்றால் என்ன?

அமெரிக்கா தனது கடற்படையை அணியாகப் பிரித்து வைத்திருக்கிறது. ஆறாவது கடற்படை அணி மூன்று பகுதிகளைக்கொண்டது. அவசியம் நேரும்போது மற்றொருகடற்படையும் இதனுடன் சேரும். இந்த கடற்படை அணியில் 30,000 கடற்படை வீரர்கள் இருக்கிறார்கள். 50 போர்க்கப்பல்கள் இருக்கின்றன. 'விமானந்தாங்கிக்கப்பல்கள் இரண்டு இருக்கின்றன. ஒவ்வொரு கப்பலின் மீதும் 250 விமானங்கள் தங்க முடியும். இந்தக்கடற்படையிலுள்ள பீரங்கிதாங்கும் கப்பல்கள் 25. இந்தப் போர்க்கப்பல்களுக்கு அணு ஆயுத அமைப்புக்களும் நீர்மூழ்கிக் கப்பல்களும் இருக்கின்றன.

இஸ்ரேலுக்கும் மற்றும் அரபு நாடுகள் சிலவற்றுக்கும் நவீன ஆயுதங்களையும் கொடுத்துவிட்டுப் போதாக்குறைக்கு மத்தியதரைக் கடலில் ஆறாவதுகடற்படை அணியையும் நிறுத்திக் கொண்டு. இப்போதைய சண்டையில் எப்பக்கமும் சாராமல் நடுநிலைமை வகிக்கப்போகிறோமென்றால் அதன் அர்த்தமென்ன?

### அரபு-இஸ்ரேல்

"ஈழநாடு" பத்திரிகையில் வெளியாகும் விளம்பரங்களுக்கு அதன் நிர்வாகிகள் எவ்வித பொறுப்பும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். விளம்பரம் செய்பவர்களே எதற்கும் முழுப்பொறுப்பாளிகள்.

### திருமணம்

சங்கானைப்பட்டினசபைத் தலைவரும் ஈழநாடு உதவி ஆசிரியருமான திருநிறைச்செல்வன் சி. கந்தையா திருச்சிற்றம்பலம் அவர்களுக்கும், அளுத்கம அரசினர் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் திருநிறைசெல்வி முத்துக்குமாரசுவாமிபிள்ளை மங்கையர்க்கரசி அவர்களுக்கும் 9-6-67 வெள்ளிக்கிழமை காலை 7-30 மணி தொடக்கம் 10-00 மணிவரையுள்ள நல்வேளையில் மணமகள் இல்லத்தில் ('புலவர் அகம்', மயிலணி, சுன்னாகம்.) திருமணம் நிகழும். 10-ந்திகதி பிற்பகல் 4-30 மணிக்கு மணமகன் இல்லத்திலும், 11-ந் திகதி பிற்பகல் 3-30 மணிக்கு மணமகள் இல்லத்திலும் விருந்துபசாரம் நடைபெறும். உறவினரும் நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். 1894

தமக்கென ஒரு நாட்டை அமைத்துக்கொண்டதும் அவர்கள்மீது அரபு நாடுகளுக்குள்ள நெடுநாட்பகையும் மட்டும்தான் காரணமல்ல.. மேற்காசியாப்பகுதியில்தான் உலகிலுள்ள பெட்ரோல், பெட்ரோலியப் பொருள்கள் பெருமளவில் அதாவது நூற்றில் 61 வீதம் கிடைக்கிறது. இந்த எண்ணெய்மீதுள்ள கண்தான் இந்தப்பகுதியில் மேற்கத்திய வல்லரசுகளுக்கும் சோவியத் யூனியனுக்கும் அக்கறை இருக்கக்காரணம்.

மத்தியதரைக் கடலில் அமெரிக்க ஆறாவது கடற்படை அணி தங்கியிருந்தாலும் கருங்கடலில் சோவியத் கடற்படை அணியொன்று இப்போது நின்றபோதிலும் வல்லரசு மோதலாக மேற்கு ஆசிய சண்டை பெரிதாகுமென இப்போதுள்ள நிலையில் கருதுவதற்கில்லை.

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
2-30, 6-30, 9-45

### ஏலவிற்பனை

வலிகாமம் கிழக்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், நீர்வேலி.

மேற்படி சமாசத்தில் பயன்படுத்தக்கூடிய பழைய லொறி ரயர்களும், உதிரிப் பாகங்களும், வெற்றுச் சாக்குகளும், வெற்றுப் பெட்டி, சீமெந்து உறைகள், வெற்றுத் தகரம், கடலைப் பருப்பு, துவரம் பருப்பு ஆகியன விற்பனைக்கு இருக்கின்றன. ஏலவிற்பனை 17-6-67 சனிக்கிழமை காலை 11 மணியளவில் நடைபெறும்.

க. வீ. கனகசபாபதி,
தலைவர்.

நீர்வேலி,
4-6-67.

2323

### கல்வி

புத்தகம்:
மூன்றே மாதத்தில் இலக்கண முறையில் ஆங்கிலம் கற்றுக்கொள்வதற்கு வகுக்கப்பட்ட நூல் Rs. 1/50. P. V. ஞானராஜ், த. பெ. எண் 357, கொழும்பு. 1895

### தேவை

லொறிச்சாரதி:
ஒரு லொறிச்சாரதி ஒரு லொறிக்கிளீனர், ஒரு ஏவலாளன். விண்ணப்ப முடிவுதிகதி 17-6-67. ஏனைய விபரங்களுக்கு நிர்வாகக் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும். வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சமாசம், சுன்னாகம். 1891

### விற்பனைக்கு

கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்குண்டு. இன்று பி. ப. 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பார்வையிடலாம். மறுநாட்களில் 5 மணி-7 மணிவரை. 147, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2412

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
SEAN CONNRY
in
FROM RUSSIA WITH LOVE

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஆர். ராதா, ஸ்ரீரஞ்சனி
நடித்த
ரத்தக்கண்ணீர்

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA

நடத்தி சண்டையை ஆரம்பித்து வைத்தது என்று ஐக்கிய அரபுக் குடியரசும் ஐக்கிய அரபுக்குடியரசு தான் சண்டையைத் தொடங்கியது என்றும் இஸ்ரேலும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டினர். யார் முதலில் சண்டையை ஆரம்பிக்கிறார்களோ அவர்களுக்கு பிரான்சின் அனுதாபமும் இருக்காது ஆதரவும் கிடைக்காது என்று பிரஞ்சு அதிபர் ஜெனரல் டிகோல் தெரிவித்திருந்தபோதிலும் சண்டைக்கு வரிந்து கட்டிக்கொண்டு எதிரும் புதிருமாக நிற்பவர்கள் யார் முதலில் கை வைப்பது என்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பார்களே

பிரிட்டன் மற்றும் மேற்கத்திய நாடுகளின் ஆதரவு இருப்பதும் ஐக்கிய அரபுக் குடியரசு, சிரியா ஆகிய அரபுநாடுகளுக்கு சோவியத் யூனியன் ஆதரவுஇருப்பதும் சமீபத்தில் இதை சோவியத் யூனியன் வெளிப்படையாகத் தெரிவித்ததும் அனைவரும் அறிந்த உண்மை. இதனால்தான் மேற்குஆசியாவில் யுத்தநிலை தோன்றியதும், இஸ்ரேல்-அரபு நாடுகள் சண்டைமூண்டதும் இதில் வல்லரசுகளும் தலையிட்டு

காரணம் என்பது ஒருபுறமிருக்கட்டும். இஸ்ரேலுக்கும் அரபுநாடுகள் பலவற்றுக்கும் இந்த வல்லரசுகள் ஆயுதங்கள் வழங்கிவந்ததும் இருக்கட்டும். மேற்குஆசியாவில் இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையில் அடிக்கடி மோதல் ஏற்பட்டுவந்ததையும்கூட ஒரு புறத்தில் வைத்துவிட்டு சென்ற இரண்டு மூன்று வாரங்களாக நடந்த சம்பவங்களை மட்டும் கவனிப்போம். இஸ்ரேல்-ஐக்கிய அரபுக் குடி

இருக்கின்றன.

ளித்த இந்த வல்லரசுகள் மேற்கு ஆசியாவில் இன்று தோன்றியுள்ள கொந்தளிப்புக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் அறிகுறிகள் தோன்றிய போதே ''அமைதியை'' நிலைநாட்ட ஐ. நா. மூலம் நடவடிக்கை எடுத்திருக்கலாமே!

மேற்கு ஆசியாவிலுள்ள பதினொரு நாடுகளுக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள சண்

அவை கொடுத்திருக்கின்றன. இந்த ஆயுதங்களை வழங்கியது தவிர மத்திய தரைக் கடலில் அமெரிக்கா தனது ஆறாவது கடற்படையையும் நிறுத்தி வைத்திருக்கிறது. அதாவது இஸ்ரேலுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக இஸ்ரேலைக் கண்காணித்துக்கொண்டு அந்த ஆறாவது கடற்படை நிற்கிறது. அதுவும்இந்தச்சண்டை

கொண்டு. இப்போதைய சண்டையில் எப்பக்கமும் சாராமல் நடுநிலைமை வகிக்கப்போகிறோமென்றால் அதன் அர்த்தமென்ன?

## அரபு-இஸ்ரேல் தகராறுமட்டுமா

இஸ்ரேலுக்கும் அரபுநாடுகளுக்குமிடையே இப்போது ஏற்பட்டுள்ள சண்டை பாலஸ்தீனத்தில் யூதர்வந்து

ஆசிய சண்டை பெரிதாகுமென இப்போதுள்ள நிலையில் கருதுவதற்கில்லை.


எம். ஆர். ராதா, ஸ்ரீரஞ்சனி
நடித்த
**ரத்தக்கண்ணீர்**

**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
2-30, 6-30, 9-45
புண்ணியா ஹின்தேனியா
சேனதிரா குறுக்கு
நடித்த
**தெய்யன்னேரட்ட**
[சிங்களம்]

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
விடுமுறை தினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
**பெண்ணே நீ வாழ்க!**


**பார் சாரம்** · **அரசியல் நிருபர்**

# பிரதமர் கெய்ரோ செல்வாரா?

மேற்கு ஆசியாவில் சண்டை தொடங்கிவிட்டது. நமக்கு அடுத்த ஐந்து ஆறு மாதங்களுக்குத் தேவையான அரிசியும், ஆறு மாதங்களுக்குத் தேவையான கோதுமை மாவும் கையிலிருப்பதால் உணவு நெருக்கடி ஏற்படமாட்டாதென்றும் கவலைப்படத் தேவையில்லை என்றும் உணவுக்கமிஷனர் திரு. பி. எஸ். சில்வா 'அஞ்சேல்' என அபயமளித்திருக்கிறார்.

அரிசி நெருக்கடிகூட இங்கு திடீரென்றுதான் ஏற்பட்டது. அப்போதும்கூட மாவு கையிருப்பிலிருப்பதாக உணவு அமைச்சரும், பிரதம மந்திரியும் இந்த உணவுக் கமிஷனர் கொடுத்த விபரத்தைக்கொண்டுதான் தெரிவித்தார்கள் என்று நினைக்கிறேன். அரிசி நெருக்கடியுடன் மாவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு ஒரு றாத்தல், அரை றாத்தல் மாவுக்காக எத்தனையோ கடைப்படிகள் ஏறி இறங்கியவர்களுக்குத்தான் அதன் அருமை தெரியும்!

மேற்கு ஆசிய யுத்தம் அதிகநாள் நீடிக்காதென்று உணவுக் கமிஷனர் நினைப்பது போலவே நாமும் நினைப்போம். அரிசி அரபு நாடுகளிலிருந்து இங்கு வரவில்லை. ஆசிய நாடுகளிலிருந்து வருவதால் அதிக கஷ்டம் ஏற்படாதென்று ஆறுதலடைவோம்.

கார் வைத்திருப்பவர்களுக்கு மட்டும்தான் பெட்ரோல் தேவையென்பதில்லை பெட்ரோல் தட்டுப்பாடு ஏற்பட்டால் சுன்னாகம் சந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரும் கீரைப்பிடியின் விலையும் அதிகரிக்கும்! கீரைப்பிடிக்கே இந்த நிலை வருமானால் இதர பொருள்களைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

உணவுக் கமிஷனர் மட்டுமல்ல, அரசாங்கமே இவ்விஷயத்தில் சிறிது கவனம் செலுத்தி முன்னெச்சரிக்கையாகச் சில காரியங்களை மேற்கொள்வது நல்லது. ஏற்கனவே வாழ்க்கைச் செலவு உயர்வால் மக்கள் படும் கஷ்ட நஷ்டங்களை நினைவில் கொள்ளவேண்டும்.

## பிரதமர் கெய்ரோ விஜயம்

கனடா செல்லும் வழியில் கெய்ரோவுக்குச் செல்ல விருப்பதாகப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா சில தினங்களுக்கு முன் தெரிவித்திருந்தார். இப்பொழுது இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையில் சண்டை தொடங்கிவிட்டது. இச்சண்டையில் இலங்கை எவரை ஆதரிக்கும் என்ற பிரச்னை இல்லை. சமாதானம் நிலவவேண்டுமென்பதே இலங்கை அரசாங்கத்தின் கொள்கையாக இருக்குமென்று பிரதமர் தெளிவாகச் சொல்லிவிட்டார். சண்டை தொடங்கிவிட்டது. இப்பொழுது உடனடிப் பிரச்னை யுத்தத்தை நிறுத்துவதுதான். இலங்கை சிறிய நாடாக இருந்தாலும் அரபு நாடுகளினதும் இஸ்ரேலினதும் நட்பு இலங்கைக்கு இருக்கிறது. ஐ. நா. பாதுகாப்புச்சபை யுத்தத்தை நிறுத்துவதற்கு முயற்சி செய்கிறது. இந்த முயற்சியில் இலங்கையும் பங்குகொண்டிருக்கிறது. ஐ. நா. சபை முயற்சிசெய்யும் அதேசமயம் இலங்கையும் ராஜீய ரீதியில் மேற்கு ஆசியாவில் யுத்தத்தை நிறுத்தவும், மீண்டும் இதுபோன்ற 'மோதல்' ஏற்படாமல் தடுக்கவும் முயற்சி செய்யலாம். ஆசிய நாடுகளின் பிரச்னைகளை ஆசிய நாடுகளே தீர்ப்பதற்கு முன்வந்தால் அந்நியரின் அனாவசியமான தலையீடு ஆசியாவில் குறைவதற்கு வழி பிறக்கலாம். இலங்கை முயற்சி செய்தால் பயன் கிடைக்காமல் போகாது.

## இந்திய வம்சாவழியினர்

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதா ஜனப்பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுவிட்டது. பார்லிமெண்டின் உள்ளேயும் வெளியேயும் இந்த மசோதாவை இனியும் எதிர்த்துத்தான் தீருவோம் என்று எதிர்க்கட்சியினர் தெரிவித்திருக்கின்றனர். எவர் எதிர்த்தாலும் மசோதா பற்றி பலரும் தங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்து தாம்நினைத்தபடி உரிய நேரத்தில் மசோதாவை நிறைவேற்றியிருக்கிறார் பிரதமர். இதில் பிரதமர் காட்டிய உறுதியும் துணிச்சலும் பாராட்ட வேண்டிய விஷயம்.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பிரச்னை பொருளாதாரப் பிரச்னைதானென்றும்பெரும்பான்மைச் சமூகமக்களுக்கு வேலையில்லாதிருப்பதுதான் இங்கிருந்து இந்திய வம்சாவழியினரை திருப்பி அனுப்ப வேண்டுமெனக் கேட்கிறார்களென்றும் கூறப்பட்டது. இதில் உண்மையிருக்கலாம். ஆனால் தோட்டத்தொழிலாளரைப் பொறுத்தவரையில் அவர்கள் இந்நாட்டுப் பணத்தைச் சுரண்டிக் கொண்டு போகிறார்களென்றும் அவர்களிருப்பதால் பெரும்பான்மைச் சமூகமக்களுக்கு வேலைவாய்ப்பில்லாமல் போகிற தென்பதோ முக்கியகாரணமாகத் தெரியவில்லை. எதிர்க்கட்சியினர் அஞ்சுவதெல்லாம் தோட்டத் தொழிலாளரான இந்திய வம்சாவழி மக்களுக்குக் கிடைக்கவிருக்கும் வாக்குரிமையை நினைத்துத்தான். இந்திய வம்சாவழி மக்களின் பிரச்னை பார்லிமெண்ட் ஸ்தானங்களையும் அரசியலையுமே பொறுத்திருக்கிறது. எதிர்க்கட்சியினர் அஞ்சுவதிலும் நியாயமில்லை என்று கூறிவிட முடியாது. ஆனால் அவர்கள் அந்த மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் சுலபமாகப் பெற்றிருக்கலாம். அந்த நல்ல சந்தர்ப்பத்தைத் தவறவிட்டுவிட்டார்களே!

## பத்திரிகை கணக்கு

அடுத்த தேர்தலில் 2,25,000 இந்திய வம்சாவழியினர் வாக்களிப்பர் என்று ஒரு செய்தியை 'சன்' என்ற ஆங்கிலத் தினசரிப் பத்திரிகை முதல் பக்கத்தில் பிரசுரித்திருந்தது. இதுபோன்ற செய்திகளை நல்லெண்ணத்துடன் அது முதற் பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கமாட்டாது. என்ன கணக்கில் அடுத்த தேர்தலில் இரண்டேகால் லட்சம் இந்தியர் வாக்குரிமை பெற்றுவிடுவார்களென்று கூறியதோ?

## பல் எமனாகியது

வல்வெட்டித்துறை, செவ்

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த சரவணப் பெருமாள் பெண் பொன்னம்மா பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் பல்பிடுங்கியபின்னர்மயக்கமுற்றுஸ்தலத்திலே விழுந்து மரணமானார்.

மரணவிசாரணை அதிகாரி எஸ். இராமநாதன் ஸ்தலத்திற்கு சென்று விசாரணை நடத்தினார். பல் பிடுங்கிய இடத்திலிருந்து வெளியேறியஇரத்தம் தொண்டைக்குள் சென்று அடைத்து மூச்சுத்திணறியதால் இறந்தாரென விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. தற்செயலாக ஏற்பட்ட மரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

## அணுகுண்டு

லண்டன், ஜூன் 6

பசுபிக் வட்டாரத்துக்கு தெற்கே பிரான்ஸ் தனது முதலாவது அணுகுண்டை வெடித்தது. இந்த அணுகுண்டு நடுத்தரசக்தியுடையதென அறிவிக்கப்பட்டது.

## கனவு...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

முடியாமல் தமிழ் பேசும் மக்கள் திண்டாடுகின்றனர்.

தமிழ் மக்கள் தாம் மேற்கொள்ளும் எல்லாத் தொடர்புகளையும் தமிழிலேயே மேற்கொள்ள வேண்டும். வேற்றுமொழி பேசும் வெளிநாட்டினர் பலர் தமிழ் இனிமையும் தொன்மையும் இளமையும் திண்மையும் நுட்பமும் மிக்கதெனப் பாராட்டிப் படிக்கும்போது நாம் நமது மொழியை வெறுக்கலாமா?


தமிழ்மொழிமூலம் நாம் தொடர்புகொள்வதன் மூலம் மொழியை மட்டும் வளர்க்கவில்லை. நம்மையே நாம் வளர்த்துக்கொள்கிறோம். நாம் தமிழ்மூலம் பொது நிலையங்களுடனோ வர்த்தகஸ்தாபனங்களுடனோ தொடர்பு கொண்டால் அவர்களும் நம்முடன் தமிழில் தொடர்புகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. எனவே அந்த ஸ்தாபனங்களில் தமிழ் தெரிந்தவர்கள் நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

இஃது எதிர்காலச் சந்ததியினருக்கு உத்தியோக வாய்ப்பை நல்குகிறது. வாழ்வளிக்கும் தமிழை நாம் வளம்படுத்துவோமாக.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# இப்பொழுது நடைபெறுகிறது

**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] **ஈரேஸ்** [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை
**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
**விஜயா** [மட்டுநகர்] **ஸ்ரீகிருஷ்ணா** [திருமலை] **மொடேர்ன்** [பதுளை]
**மொடேர்ன்** [பண்டாரவளை] **விஜிதா** [ஹட்டன்] **தீவொளி** [நுவரெலியா]
**கல்யாணி** [நாவலப்பிட்டி]
ஆகிய திரைகளில்
தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!
நடிக மன்னன் **சிவாஜி கணேசன்,**
நடிக ராணி **கே. ஆர். விஜயா,**
**ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா,**
**நாகேஷ்**



வி. கே. ஆர். பிக்சர்சின்
# செல்வம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org